viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 031 வள்ளுவர் ஆண்டு 2053 தை 06 புதன்கிழமை (19.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள்

# அரசின் வேலைத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

### கொள்கை விளக்க உரையில் ஜனாதிபதி கோட்டா

- வடக்கு - கிழக்கில் படையினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படும்.
- முன்னாள் புலி உறுப்பினர்களை சட்டரீதியாக விடுவிக்க நடவடிக்கை.
- பயங்கரவாதச் தடைச் சட்டத்தில் காலத்திற்கேற்ப மாற்றங்களை செய்யப்படும்.



(15ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் உரை ஏமாற்றம்

### தேநீர் விருந்தை புறக்கணித்த கூட்டமைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வழங்கப்பட்ட சம்பிரதாயபூர்வமான தேநீர் விருந்துபசார நிகழ்வினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்துள்ளது.

நேற்று பாராளுமன்றில் இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை, தீர்வு விடயம் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை.

அத்தோடு தற்போது மக்கள் எதிர் 15

## ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மோசமானது

### சுமந்திரன் எம்.பி விமர்சனம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் கொள்கை தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நேற்று ஆற்றிய உரை, மிக மோசமானது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் கருத்து வெளியிடுகையில்,

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண் 15

## ஜனாதிபதி உரை வெறும் குப்பை அதில் ஒன்றுமே இல்லை

### இதை அவரிடமே சொல்லுங்கள்

### பஸிலிடம் சம்பந்தன் நேரில் காட்டம்



**(கொழும்பு) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் கொள்கை விளக்க உரை வெறும் குப்பை. அதில் ஒன்றுமே இல்லை. இதை அப்படியே போய் ஜனாதிபதியிடம் கூறுங்கள். இவ்வாறு ஜனாதிபதியின் சகோதரரும் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்சவிடம் முகத்துக்கு நேரில் காட்டத்துடன் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

9ஆவது பாராளுமன்றத்தின் 2ஆவது கூட்டத் தொடரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நேற்று காலை ஆரம்பித்து வைத்தார்.

அதன்பின்னர் அவர் ஆற்றிய கொள்கை விளக்க உரை தொடர்பில் தகவல் வெளியிட்ட கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் இந்தத் தகவலை வெளியிட்டார். இது தொடர்பில் சுமந்திரன் எம்.பி. மேலும் வெளியிட்ட தகவல்கள் வருமாறு,

ஜனாதிபதியின் பேச்சை செவிமடுத்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அதையொட்டி இன்று (நேற்று) பெரும் கோபம் கொண்டார். பேச்சு முடிந்த கையோடு எழுந்து பாராளுமன்றில் பகிரங்கமாகத் தம் எதிர்ப்பை பதிவு செய்ய அவர் விரும்பினார். 15

## 13 ஆவது திருத்தத்தை வலியுறுத்தும்

### தமிழ்க் கட்சிகளின் ஆவணம் இந்திய தூதரிடம் கையளிப்பு



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து தயாரித்த கூட்டு ஆவணம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம் நேற்று மாலை கையளிக்கப்பட்டது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கையளிப்பதற்காகத் தமிழ் மக்களின் பொது நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தத்தை நடைமு 15

## கொரோனா 13 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 13 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளது.

அதன்படி, இலங்கையில் இதுவரை 15

## அரசியல் தீர்வைப் பேச அழைப்பார் என எதிர்பார்த்தேன்

### கோட்டா உரை தொடர்பில் மனோ

(கொழும்பு)

"அரசியல் தீர்வுக்கான பேச்சு வார்த்தை நடத்த தான் தயார்" என்ற ஒரு நிலைப்பாட்டை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இன்று (நேற்று) தன் கொள்கை உரையில் அறிவிப்பார் என்று கடந்த சில நாட்களாக ஒருசில ஆங்கில, தமிழ், சிங்கள ஊடகங்களிலும், ஒருசில தமிழ் அரசியல் தரப்புகளாலும் வெளியிடப்பட்ட ஊகங்கள் இன்று 15

## அரசு தோல்வி அடைந்துவிட்டது

### பகிரங்கமாக ஒப்புக்கொண்டார் அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)

அரசாங்கம் தோல்வியடைந்து விட்டது என்பதை பகிரங்கமாக ஒப்புக்கொள்ளவேண்டுமென் சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசின் தோல்விக்கான காரணத்தையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதாகவும், இந்த நிலைமையை கட்டுப்படுத்த 15

## கிணற்றில் தவறி விழுந்த 16 வயது சிறுமி உயிரிழப்பு

### ஆட்டுக்கு குழை வெட்ட சென்றபோது கரணவாயில் பரிதாபம்

(கரணவாய்)

ஆட்டுக்கு குழை வெட்டச் சென்ற சிறுமியொருவர் கிணற்றில் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கரணவாய், அண்ணாசிலையடிப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் நேற்று மேலும் +672 பேருக்கு தொற்று

(கொழும்பு)
கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 672 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 598, 379 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 14, 462 பேர் சிகிச்சை நிலையங்களில்சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம)


## வேலையாட்கள் தேவை

கோண்டாவில், கைதடி பூசைப்பொருட்கள் விற்பனை நிலையத்துக்கு விற்பனையாளர் தேவை. (ஆண், பெண்)

தொடர்பு:
077 310 8671
077 711 0629
(9732)


# பசுமை விவசாய கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லை

## கொள்கை விளக்கவுரையில் ஜனாதிபதி

(கொழும்பு)
பசுமை விவசாயம் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசின் கொள்கைப் பிரகடன உரையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

குறைபாடுகளை நிவர்த்தி செய்து இந்த கொள்கையை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வாகன இறக்குமதிக்கு எதிர்காலத்தில் அனுமதி வழங்கப்படுவதுடன், மின்சாரத்தில் இயங்கும் கார்களை இறக்குமதி செய்ய முன்னுரிமை வழங்கப்படும் என்றார். (ம)


## உடனடி வேலைவாய்ப்பு

ஆவரங்காலில் அமைந்துள்ள எமது நிறுவனத்திற்கு Typing தெரிந்தவர்களுக்கு உடனடி வேலை வாய்ப்புண்டு.
(9730)
T.P:- 077 694 4543

## லொத்தர் சீட்டு விற்பனையாளர் தேவை

துவிச்சக்கரவண்டி, லொத்தர் கூடாரங்களுக்கு விற்பனையாளர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும்.
(9728)
தொடர்பு கொள்ள வேண்டிய தொ.இல
077 213 3460

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி A32 மெயின் றோட்டில் 1 ஆம் வீதியில் 15 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
(9731)
நாவற்குழி சந்தியிலிருந்து 300m தூரம். வீடமைப்பதற்கு நல்ல சூழல். (நிலப்பரப்பு)
ஒரு பரப்பின் விலை 5 இலட்சம்.
076 890 9259
077 015 0353


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி
ச. இராஜயோகானந்தம்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
**கந்தையா குழந்தை**
அவர்கள் 17.01.2022 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/ வரணி வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை
(C-3571)


## வேலைவாய்ப்பு

80க்கும் மேற்பட்ட கிளைகளை நாடுபூராகவும் கொண்டியங்கும் எமது Inner Circle (pvt) Ltd நிறுவனத்துக்கு மேலும் 40 பதவி வெற்றிடங்கள்

கிளைகள்: யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார்

O/L அல்லது A/L கற்றிருப்பின் WhatsApp இன் ஊடாக (0767565659) உங்களது Name, NIC, Place அனுப்பி பதிவு செய்து கொள்ள முடியும்.

**பதவி வெற்றிடங்கள்**
- நிர்வாக அதிகாரி
- செயல்திட்ட அதிகாரி
- அலுவலக உதவியாளர்
- முகாமைத்துவ உதவியாளர்
- மேற்பார்வையாளர்



முன்அனுபவம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும்.
பயிற்சிக் காலம்:- 18,500/= - 24,500/=
பின் குறைந்தது 45,000/= + EPF + ETF
(9733)
தொடர்புகளுக்கு- 076 770 7759

## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடைவை நிலையத்திற்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை. மேலும் கணனி அனுபவம் உள்ள சிட்டை போடுபவர் உடன் தேவை.
(C-3569)
-077 748 8093

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532




## கேள்வி கோருதல்

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயில்**
**நூலகம், அரும்பொருட் காட்சியகம்**
**புனரமைப்பும் அழகுபடுத்தலும்**

மேற்படி வேலைகளுக்கான கேள்விகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றது. இவ்வேலைகள் செய்வதற்கான சிற்ப வேலையாட்கள், பொருத்தமான வேலைகளுக்கு அனுபவம் பெற்றோர் கைவசமுள்ள ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விகள் சமர்பிப்பதுடன் வேலைகள் யாவும் 01.02.2022ஆம் திகதி ஆரம்பித்து ஆறு மாதத்திற்குள் முடிவுறுத்தப்படல் வேண்டும்.

கேள்வி விண்ணப்பப்படிவங்கள் ஆலய அலுவலகத்தில் 20.01.2022 காலை 10.00 மணி முதல் வழங்கப்படும். கேள்வி விண்ணப்பம் முடிவுத்திகதி 25.01.2022 மாலை 3.30 மணிவரையாகும். கிடைக்கப்பெறும் கேள்விகள் 26.01.2022 காலை 11.00 மணிக்கு ஆலய அலுவலகத்தில் திறக்கப்படும். விரும்பிய கேள்வியாளர்கள் இவ்வேளையில் சமுகமளிக்கலாம். கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா ஆயிரம் பணமாகச் செலுத்தி பற்றுச்சீட்டு இலக்கம், திகதி என்பன கேள்விப்பத்திரத்தில் உரிய இடத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

ந.மோகனரூபன்
செயலாளர்
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

18.01.2022
(C-3570)

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர்.

- **கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு** (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம்
  - வயது : 25 இற்கு மேல்
- **அலுவலகச் செய்தியாளர்கள்** (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி
  - வயது : 25 இற்கு மேல்
- **ஒப்புநோக்குநர்** (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி
  - வயது : 30 இற்கு மேல்
- **பாதுகாப்பு உத்தியோகத்தர்** (ஆண்)
  - தகைமை : க.பொ.த.சாதாரண தரம்
  - வயது : 40 இற்கு மேல்

தகைமையும் விருப்பமும் உடையவர்கள் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் 21.01.2022 (வெள்ளிக்கிழமை) அன்று பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

(யாழ். நகருக்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்
- வலம்புரி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு ஆண்டுகள் நாட்டை நாசமாக்கி விட்டு

## எதிர்வரும் ஆண்டுகளில் சிறப்புற செய்வோம் என்பது சரியா?

## ஹிருணிகா கேள்வி



(கொழும்பு)

**நாட்டில் காணப்படும் பலவித பிரச்சினைகளால், இந்த அரசால் நாட்டை வழிநடத்த முடியும் என்ற நம்பிக்கை இல்லாமல் போய் விட்டது என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.**

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அனைத்து பொருட்களிற்கும் வரிசையில் நிற்க வேண்டிய நிலையே தற்போது உள்ளது.

நாட்டு மக்கள் அனைவரும் எந்த ஒரு கஷ்டமான காலகட்டத்திலும் சாப்பிடாமல் இருந்தது இல்லை.

பல ஆண்டுகளாக பழக்கப்பட்ட உரத்தை முற்றாக நிறுத்தி விட்டு இரசாயன உரம் தருகிறோம் பயன்படுத்துங்கள் என்று கூறுவது சரியா?

2 ஆண்டுகள் நாட்டை நாசமாக்கி விட்டு எதிர்வரும் ஆண்டுகளில் சிறப்புற செய்வோம் எனக் கூறுவது சரியா?

ராஜபக்ஷ என்ற நபரால் கட்டி எழுப்பிய மதிப்பு, இன்னும் ஒரு நபரால் வீணடிக்கப்பட்டுள் ளது.

அமெரிக்காவில் இருந்தவர் நாட்டை அபிவிருத்தி செய்வார் என்று நினைத்தோம். ஆனால் அவர் நாட்டை வீணடித்து விட்டார் என ஹிருணிகா தெரிவித்தார். (நி)

## ஜனாதிபதியின் செயலராக காமினி பதவியேற்பு



(கொழும்பு)

ஜனாதிபதி செயலாளராக காமினி செனரத் இன்று பதவியேற்கிறார்.

ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் கலாநிதி பி.பி.ஜயசுந்தர கடந்த வியாழக்கிழமை தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து அவரால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு காமினி செனரத் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நெருக்கடிக்கு மத்தியிலும் 500 மில்.டொலர்களை மீளச் செலுத்திய இலங்கை

(கொழும்பு)

இறையாண்மை முறிக்கான 500 மில்லியன் டொலர்களை இலங்கை செலுத்தியுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. இந்த இறையாண்மை முறி முதிர்வு காலத்தை எட்டியதை அடுத்தே, நேற்று 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது கடுமையான டொலர் நெருக்கடி ஏற்பட்டுள்ளதுடன், இதன் விளைவாக பொருட்களை இறக்குமதி செய்வதில் பெரும் சிக்கலை அரசாங்கம் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலேயே அரசாங்கம் இலங்கை இறையாண்மை முறிக்கான 500 மில்லியன் டொலர்களை மீளச் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## உள்நாட்டவர்களை புறக்கணிக்கும் ஹோட்டல்களுக்கு சீல்

(கொழும்பு)

"வெளிநாட்டவர்களுக்கு மட்டும்" என்ற கொள்கையைப் பின்பற்றுகின்ற விடுதிகள் மற்றும் உணவகங்களது அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படும் என்று இ ங்கை சுற்றுலா அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது. நாட்டில் இயங்கும் சில உணவகங்கள் மற்றும் விடுதிகள், வெளிநாட்டவர்களுக்கு மட்டும் என்ற கொள்கையைப் பின்பற்றி இலங்கையர்களைப் புறக்கணித்த சந்தர்ப் பங்கள் பதிவாகியுள் என. இதுதொடர்பான பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

இலங்கையின் சுற்று லாத்துறை வீழ்ச்சி கண்ட சமயத்தில், அதிலிருந்து மீள்வதற்கு உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பெரும் பங்களிப்பை வழங்கி இருந்தனர். இதேபோன்று நாட்டின் அரசியல் யாப்பின்படி நாட்டின் சகல பிரஜைகளும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்று சுற்றுலாத்துறை அபிவிருத்தி சபை தெரிவித்துள் ளது. (நி)

## துறைமுக நகர கொரோனா கொத்தணி உருவாகும் நிலை

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகர சூழலை பார்வையிட அதிகாரிகள் மக்களுக்கு அனுமதியை வழங்கிய பின்னர் சுகாதார ஆலோசனைகள் அல்லது சமூக இடைவெளியை கவனத்தில் கொள்ளாது, அதிகளவிலான மக்கள் துறைமுக நகரை பார்வையிட சென்றுள்ளனர். இவ்வாறான நிலைமையில், அடுத்துவரும் தினங்களில் துறைமுக நகர கொரோனா கொத்தணி உருவாகும் வாய்ப்புள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இலங்கையில் ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் திரிபு பெருமளவில் பரவும் ஆபத்து இருப்பதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை**

**கோழி இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடை மற்றும் பழைய முள்ளிப்பற்று உப அலுவலகத்தினை 01.02.2022 - 31.12.2022 வரையுள்ள காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலக்கேள்வி அறிவித்தல் - 2022**

கீழ்குறிப்பிடப்படும் பிரதேச சபை எல்லைப் பரப்பிற்குட்பட்டகோழி இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடை மற்றும் பழைய முள்ளிப்பற்று உபஅலுவலகம் என்பன 2022 ஆம் ஆண்டிற்காக 01.02.2022 தொடக்கம் 31.12.2022 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- ஏலகேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :-19.01.2022 - 28.01.2022 வரை
- ஏலகேள்விஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி :-28.01.2022 காலை 10.00மணிவரை
- ஏலம் நடைபெறும் திகதி :- 28.01.2022
- ஏலம் நடைபெறும் நேரம் :-காலை 11.00மணி
- ஏலம் நடைபெறும் இடம் :- தலைமை அலுவலகம்.

| இல. | கடை இல. | 2022ம் ஆண்டுக்கான ஆகக் குறைந்த ஏலத் தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) |
|---|---|---|---|
| புலோப்பளை உபஅலுவலகம் | | | |
| 01 | கோழி இறைச்சிக்கடை | 666,820.00 | 16,000.00 |
| 02 | கருவாட்டுக்கடை | 11,364.00 | 5,000.00 |
| முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | |
| 03 | கோழி இறைச்சிக்கடை | 56,364.00 | 5,000.00 |
| 04 | பழைய முள்ளிப்பற்று உப அலுவலகம் | 81,818.00 | 5,000.00 |


**நியந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
02. ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணத்தினை 28.01.2022 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும்.
03. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
04. கேள்விச் சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் ஏலத்தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்பு பணத்தை செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும். பாதுகாப்பு வைப்புபணத்தை உடனடியாக செலுத்த தவறும் பட்சத்தில் அடுத்த கேள்வி தாரருக்கு குத்தகை வழங்கப்படும்.
05. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகையினை மாதாந்தம் 05 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும்.
06. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
07. ஏலக்கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர் / செயலாளருக்கு உண்டு.
08. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**
**19.01.2022**

(C-3566)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



10 ஆவது வன்னியின் பெரும்போர் சமநிலையில் நிறைவடைந்தது. கிளிநொச்சி மகாவித்தியாலய அணி முதல் இன்னிங்சில் 9 விக்கெட்டுகளை இழந்து 250 ஓட்டங்களை குவித்து முதல் இன்னிங்சை நிறைவு செய்தது.

குறித்த போட்டியானது கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த 16 ஆம் திகதி காலை ஆரம்பமாகியது நாணயச்சுழற்சியில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று முதலில் களத்தடுப்பை தீர்மானிக்க புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி துடுப்பெடுத்தாடியது 78.2 பந்து வீச்சு நிறைவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி 188 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 17.05 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 83 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களை இழந்த நிலையில் முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இரண்டாவது நாள் ஆட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமானதும் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 59.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 250 ஓட்டங்களைப்பெற்றிருந்த போது தமது முதல் இன்னிங்சை முடிவுக்கு வந்தது.

இரண்டாவது இன்னிங்சிற்காக களமிறங்கிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியினர் 7 பந்துப் பரிமாற்றங்களில் 29 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினை பெற்றிருந்த போது போட்டி நிறைவுக்கு வந்தது. இதன்போது போட்டி சமநிலையில் முடிவடைந்ததாக நடுவர்கள் அறிவித்தனர். (படம் : சப்தசங்கரி)

## கால்பந்தாட்ட போட்டி
## கொற்றாவத்தை றேஞ்சஸ் சம்பியன்



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் நடத்திய 19 வயதிற்குட்பட்டோருக்கான கால்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டம் கடந்த 16 ஆம் திகதி நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து பொலிகை பாரதி அணியினர் மோதியது.

ஆரம்பம் முதல் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

ஆட்ட நேர முடிவில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். (4-90)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2491

Search for people, places and things

### அனாமீகா




இங்கு நானிருந்தேன் வெறும் மெய்யெழுத்தாக
நீ வந்து சேர்ந்தாய் உயிரெழுத்தாக




இப்போ உங்கொப்பன் வருவான் பாரு
ஆயுத எழுத்தாக

### சிவகுமார்

somebody - நம்மல பார்த்ததும் போனை தூக்கிட்டு வெளிய போறான் யாரையோ லவ் பண்றான் போல



90s'kids - டவர் கிடைக்கலன்னு வெளிய வந்தேன் இன்னுமா இந்த உலகம் நம்மல நம்புது

### சிவரஞ்சினி



அழகான மனைவி அன்பான துணைவி
அமைந்தாலே பேரின்பமே



துரைக்கு இரண்டு பொண்டாட்டி கேட்குதோ

### டேவிட் அனோயன்

உன்னை கேக் வெட்டி வரவேற்றதுக்கு




உன்னால என்ன பன்ன முடியுமோ
அத பன்னீட்ட

### கௌரி

தெருவுல தனியா புலம்பிட்டு போற
எல்லாரையும் மனநோயாளினு
நினைச்சிடாதிங்க...



வீட்டுல மனைவி கிட்ட பேச வேண்டியதை
ஒத்திகை பார்த்துட்டு போற
ஆளாகவும் இருக்கலாம்

### அபிநயன்




பேபி FEB 14th (lovers day) க்கு என்ன
பேபி பிளான்




வேற என்ன உன்ன கழட்டி விடுறது தான் பிளான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேரியாவின் பிடிக்குள் இலங்கை !

## யாழ் உள்ளிட்ட 4 மாவட்டங்களில் அபாய நிலை

(கொழும்பு)

நாட்டில் இந்த ஆண்டின் முதல் 15 நாட்களுக்குள் மாத்திரம் 5 மலேரியா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மலேரியா நோய் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவித்தார். யாழ்ப்பாணம், கம்பஹா, கொழும்பு மற்றும் காலி ஆகிய பகுதிகளிலிருந்தே, இந்த நோயாளர்கள் அடையாளம் காண ப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள மலேரியா நோயாளர்கள் ஐவரும், ஆபிரிக்க நாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள். அவர்களில் இருவர் யாழ்ப்பாணத் திலும் ஏனைய மூவர் கொழும்பு, கம்பஹா மற்றும் காலி ஆகிய இடங்களிலும் வசிப்பதாக மருத்துவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், கடந்த ஆண்டு நாட்டில் 26 மலேரியா நோயாளர்கள் பதிவாகிய அதேவேளை, இந்த ஆண்டின் முதல் 15 நாட்களில் ஐந்து நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளமையானது சிறப்பானது அல்ல எனவும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் கடைசியாக மலேரியா மரணம் 2007 இல் பதிவாகியுள்ளது. இந்த நிலையில், மலேரியா எதிர்ப்பு பிரசாரம் நாட்டில் மீண்டும் இந்த நோய் வருவதைத் தடுக்கவும் அதன் விளைவாக ஏற்படும் இறப்புகளை தடுக்கவும் விரும்புவதாக அவர் தெரிவித்தார். (நி)

## 31ம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 28 . 06 . 1925

மறைவு 21 . 12 . 2021

கடந்த 21.12.2021 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர். திரு. விஸ்வலிங்கம் வேலாயுதம்**

**(RTD M. L. T)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளையதினம் 20.01.2022 வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் , ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்,மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

N.M Lane.
Point Pedro.

(9726)

தகவல்
குடும்பத்தினர்

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 29 . 11 . 1939

ஆண்டவனின் பிடியில் 30 . 01 . 2021

**அமரர். ஆழ்வார்ப்பிள்ளை வேலாயுதம்**

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்து பக்குவமாய்வழி நடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து
எல்லோருக்கும் நல்லவராய் நாணயமாய் நடந்தீர்'
ஏனோ இறைவன் இடை நடுவில் பறித்துவிட்டான்

என் செய்வோம் இறைவன் சித்தம் இது
இனி காணமுடியாத சோகநிலையோடு
இங்கிருந்தே ஏங்கியழுகின்றோம். உங்கள் பிரிவை
மாறாத வடுவாக மனதில் சுமந்து உங்கள்
ஆத்மா சாந்திக்காய் அஞ்சலி செலுத்துகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(சி-3568)

கண்டாவளை

குடும்பத்தினர்

## இராசிபலன்

19.01.2022
தை 06, புதன்கிழமை
பிரதமை காலை 7.18 மணிவரை

பூசம் காலை 7.15 மணிவரை
சுபநேரம் -5.05-6.35 மணிவரை
இராகுகாலம் -12.35-2.05 மணிவரை

சந்திராஷ்டமம்: பூராடம்

வளவன்

**மேஷம்**: அழகு சாதனப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்,தொட்ட காரியங்களில் முன்னேற்றம்காணும் நாள், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்**: விடா முயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், உறவினர்கள் உங்களின் நலனில் அக்கறை காட்டுவார்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்**: தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு,கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி சமாளிப்பீர்கள், வெளியூர் பயணங்களால் ஆதாயம் கிடைக்கும்.

**கடகம்**: உங்களைப் பற்றி விமர்சிக்கும் சிலரிடம் எதிர்த்துப் பேசாமல் செல்வீர்கள், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்**: குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வரவைக் காட்டிலும் செலவு அதிகமாகும், வழிபாட்டால் மகிழ்ச்சி கூடும்.

**கன்னி**: குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஒளிமயமான எதிர்காலத்திற்கு அடித்தளம் அமைக்கும் நாள்.

**துலாம்**: இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, பிறர் உதவியுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**: புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**தனுசு**: கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**மகரம்**: அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**கும்பம்**: குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்வங்கள் இடம் பெறலாம்,கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.

**மீனம்**: நீண்ட நாட்களாக தள்ளிப் போட்ட காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள்.

பிறருக்கு சுமையாக அன்று சுமை தாங்கியாக இரு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கச்சாய் துறையூர் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த நடவடிக்கை எடுப்பேன்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(சாவகச்சேரி)

தென்மராட்சி-கச்சாய் துறையூர் கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த ஆறு மாத காலங்களில் நடவடிக்கை எடுப்பேன் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

அண்மையில் கச்சாய் துறைப் பகுதியில் கடற்றொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற படகுப் பொங்கல் மற்றும் அதனோடு இணைந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கச்சாய் துறையூர் மக்களின் தேவைப்பாடுகள் தொடர்பாக கடற்றொழில் சங்கத் தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் என்னிடம் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

துறைப் பகுதிக்கான வீதி அமைத்தல், இறங்குதுறை அமைத்தல், கடலினுள் புதைக்கப்பட்டுள்ள பனை மரக்குற்றிகளை அகற்றல், சாலம்பன் தீவிற்கான வீதி அமைத்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

சாலம்பன் தீவிற்கான வீதி அமைப்பது உடனே சாத்தியப்படாது. அத்துடன் இந்தப் பிரதேச மக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்ய முடியும். அதனைவிட துறையூர் கடற்றொழில் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்து அதனை மேலும் உயர்த்த ஆறு மாத காலங்களுக்குள் நடவடிக்கை எடுப்பேன் என அவர் தெரிவித்தார். (5-4-30)



தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய பிரபல நடிகருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் (எம்.ஜி.ஆர்) 105 ஆவது பிறந்த தினம் நேற்று முன்தினம் யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு, யாழ் எம்.ஜி.ஆர்.கோப்பாய் சுந்தரலிங்கத்தின் மனைவி மாலை அணிவித்து தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்வில் வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் நிரோஷ் மற்றும் எம்.ஜி.ஆரின் ரசிகர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படம் : சிவசாந்தன், ரவிசாந்)

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் விளக்கமறியல் பெப்ரவரி முதலாம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி கைது செய்யப்பட்ட குறித்த 13 மீனவர்களும், மறுநாள் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் மூன்றாவது தவணையாக குறித்த வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது 13 மீனவர்களின் விளக்கமறியலை எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி வரை நீதவான் நீடித்து உத்தரவிட்டார். (4-5-33)



பாடசாலை மட்ட போசாக்கு வலுவூட்டத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் பொ.அரவிந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன்பந்துலசேன மற்றும் கூட்டுறவு ஆணையாளர் மு.நந்தகோபாலன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படம் : மகாலிங்கம்)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி கணேசபுரம் சர்வசித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்கள் சாமஸ்ரீ தேசமானி சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்காந்தராசக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறும். (5-4)

## சித்தார்த்தன், சுமந்திரன் எம்.பிக்களுடன் வடபிராந்திய மருத்துவ அதிகாரிகள் சந்திப்பு

(குப்பிழான்)

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடபிராந்தியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மருத்துவ அதிகாரிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை புளொட் அமைப்பின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரைச் சந்தித்துத் தாம் அண்மையில் முன்னெடுத்த பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்பிலும் தாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் மற்றும் முன்வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தினர்.

சுன்னாகம் கந்தரோடையிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் இல்லத்திலும், யாழ்.நகரிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இல்லத்திலும் குறித்த சந்திப்புக்கள் இடம்பெற்றன.

வடபிராந்திய மருத்துவ அதிகாரிகளின் பிரச்சினைகள், கோரிக்கைகளை மிகுந்த ஆர்வத்துடன் கேட்டறிந்த தர்மலிங்கம் சித்தார்த்தன் பாராளுமன்றத்தில் மருத்துவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் உரையாற்றவுள்ளதாகத் தெரிவித்தார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடபிராந்திய மருத்துவ அதிகாரிகள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பில் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவின் நேரடிக் கவனத்திற்கு கொண்டு செல்வதாக எம்.ஏ. சுமந்திரனும் உறுதியளித்தார். (5-4-18)

## கற்க கசடற நாவல் வெளியீடு

(குப்பிழான்)

எழுத்தாளர் வள்ளியம்மை சுப்பிரமணியத்தின் "கற்க கசடற.." நாவல் வெளியீடு நேரடி நிகழ்வாகவும், இணையவழியாகவும் இன்று புதன்கிழமை பிற்பகல் 04.30 மணிக்கு சுழிபுரத்தில் உள்ள "சத்தியமனை" கே.ஏ.சுப்பிரமணியம் நினைவு நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். (5-4-18)

# வடமராட்சியில் மினி சூறாவளி வீடுகளும் பயன்தரு மரங்களும் சேதம்

(கரணவாய்)

வடமராட்சி கரணவாய் பகுதியில் மினி சூறாவளி ஏற்பட்டதன் காரணமாக பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

கரணவாய் தெற்கு ஜே/348 கிராம உத்தியோகத்தர் பிரிவில் வீடொன்றின் கூரையும் குமரி தோட்டம் பகுதியில் 5 வீடுகளின் கூரைகளும் தூக்கி வீசப்பட்டதாகவும், மற்றும் கரணவாய் மகா வித்தியாலய கூரையும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் கரணவாய் மத்தி ஜே/350 கிராம உத்தியோகத்தர் பிரிவில் பலா, வாழை போன்ற பயன்தரு மரங்களும் அழிவடைந்துள்ளன.

மினி சூறாவளியால் ஏற்பட்ட சேத விபரங்களை அந்தந்தப் பகுதி கிராம உத்தியோகத்தர்கள் சேகரித்து வருகின்றனர். (5-4-60-33)


# மின்கம்பத்தை மோதித் தள்ளிய 'கப்' ரக வாகனம்

(குப்பிழான்)

நாவற்குழிப் பகுதியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை வேகக் கட்டுப்பாட்டை இழந்த கப் வாகனம் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

மேற்படி சம்பவத்தில் சேதமடைந்த மின்கம்பம் அருகிலிருந்த மின்மாற்றியுடன் (ட்ரான்ஸ் போமருடன்) மோதியதில் மின் கம்பிகள் அறுந்து வீழ்ந்ததையடுத்து தென்மராட்சியின் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டது.

மேற்படி விபத்தில் கப் வாகனம் சேதமடைந்த போதும் அதில் பயணித்தவர்கள் ஆபத்தின்றி உயிர் தப்பியுள்ளனர். சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (5-4-30)



யாழ்.போதனா மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்ட திரவ ஒட்சிசன் தாங்கி நேற்று யாழ்.போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர்களான மருத்துவர் ச.சிறீபவானந்தராஜா மற்றும் மருத்துவர் சி.யமுனாநந்தா ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது. (படம் : சிவசாந்தன், ரவிசாந்)

# குப்பிழானில் டெங்கு கட்டுப்பாட்டு பரிசோதனை முன்னெடுப்பு

(குப்பிழான்)

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட குப்பிழான் தெற்கு ஜே-210 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மூன்று பேருக்கு டெங்கு நோய்த் தொற்று இனம் காணப்பட்டுள்ளது. இதனையடுத்து குறித்த பகுதியில் எதிர்வரும்-22 ஆம் திகதி சனிக்கிழமை வரை தொடர் விசேட டெங்கு கட்டுப்பாட்டுப் பரிசோதனையை முன்னெடுப்பதற்குச் சுகாதாரப் பிரிவினர் தீர்மானித்தனர். இதனையடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை குறித்த பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆர்.இந்திரஜித் தலைமையில் விசேட டெங்கு கட்டுப்பாட்டுப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி களப் பரிசோதனையில் மொத்தமாக 68 இடங்கள் பரிசோதிக்கப்பட்டதுடன் அவற்றில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களாக இனம் காணப்பட்ட 3 வீட்டு உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை அறிவித்தலும் விடுக்கப்பட்டுள்ளது. (5-4-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றவாளிகளான இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு தடைவிதிக்க பிரிட்டன் பின்னடிப்பது ஏன்?

## தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுத் தலைவர் கேள்வி

(லண்டன்)

**ஏனைய நாடுகளில் ஏற்கனவே தடைசெய்யப்பட்டுள்ள இலங்கையின் சில இராணுவ அதிகாரிகள் உள்ளடங்கலாக போர்க்குற்றங்களில் ஈடுபட்ட அனைத்து இராணுவ அதிகாரிகளுக்கு எதிராகவும் தடைவிதிப்பதற்கு ஏன் காலதாமதமாகின்றது என்று பிரிட்டனில் இயங்கும் தமிழர்களுக்கான அனைத்துக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் தலைவர் எலியற் கொல்பர் கேள்வி எழுப்பியுள்ளார்.**

பிரிட்டனில் வாழும் பரந்தளவிலான மற்றும் செல்வாக்குமிக்க தமிழ்ச் சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டுமெனில் இலங்கை இராணுவத்தினருக்கு எதிராகத் தடைவிதிக்கும் நடவடிக்கையைத் தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்யக்கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் இறுதிக்கட்டப்போரின்போது நிகழ்ந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறவேண்டிய கட்டளை வழங்கும் அதிகாரத்திலிருந்த இராணுவ ஜெனரல்களுக்கு எதிராக பிரிட்டன் அரசாங்கம் சர்வதேச மெக்னிற்ஸ்கி சட்டத்தின்கீழ் தடைவிதிக்க வேண்டும் என்று அண்மையில் 7 சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்தியிருந்தன.

அதுமாத்திரமன்றி இவ்வாண்டு பிரித்தானியாவின் பர்மிங்கில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப்போட்டியில் பங்கேற்பதற்காக முன்னாள் இராணுவத்தளபதி ஜெகத் ஜெயசூரிய தனது அணியுடன் பிரித்தானியாவிற்கு வருகைதரும் பட்சத்தில், சர்வதேச சட்ட வரம்பின்கீழ் அவரைக் கைதுசெய்து விசாரணையை ஆரம்பிப்பதொன்றே தற்போது பிரித்தானியா செய்யக்கூடிய மிகக் குறைந்தபட்ச நடவடிக்கையாகும் என்றும் அவ்வமைப்புக்கள் சுட்டிக்காட்டியிருந்தன.

இவ்வாறானதொரு பின்னணியில் சர்வதேச மெக்னிற்ஸ்கி சட்டத்தின்கீழ் இலங்கை தொடர்பில் பிரித்தானியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழர்களுக்கான அனைத்துக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவும் வலியுறுத்தியுள்ளது. (நி)

யாழ்.நகரில் G.C.E.O/L மாணவர்களுக்கு கணிதம் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். பாவனையில் உள்ள போட்டோ கொப்பி இயந்திரம் விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். (9709)

தொடர்பு- 077 364 6608

**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1978 இந்து<br>நட்சத்திரம்:விசாகம் 3<br>கி.பா:35 சூரி, செவ்7 இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/ தொழில்: A/L மெக்கானிக் (அரச)<br>தொ.இ: B/6705 | பிறப்பு: 1977இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா:10¼ சூரி2 செவ் 10இல்<br>உயரம்:160 cm<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:A/L படித்தவர்<br>தொ.இ:G/6582 |
| பிறப்பு:1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: சூரி 5 செவ் 8 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: B.Sc, Eng/ பொறியியலாளர்<br>தொ.இ: B/6709 | பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்:சுவாதி<br>கி.பா:-சூரி,செவ் 9இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/ தொழில்:சித்த வைத்தியர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு:அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/6580 |
| பிறப்பு:1975 இந்து<br>நட்சத்திரம்:விசாகம்<br>கி.பா:-37 செவ் 10 சூரி 3 இல்<br>உயரம்:5'11"<br>தகைமை/தொழில்:பட்டதாரி லண்டன் PR<br>எதிர்பார்ப்பு:-வெளிநாடு (லண்டன் மட்டும்)<br>தொ.இ: B/6729 | பிறப்பு:1983 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை 4<br>கி.பா: சூரி,செவ் 11 இல்<br>உயரம்:165 cm<br>தகைமை/தொழில்:அரசதாதி<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் அல்லது நிரந்தர தொழில்<br>தொ.இ:G/6583 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 3<br>உயரம்:5'6"<br>கி.பா:27 சூரி 2 செவ் 3 இல்<br>தகைமை/தொழில்:O/L கடை லண்டன்<br>எதிர்பார்ப்பு: லண்டன் மட்டும்<br>தொ.இ: B/6734 | பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா: சூரி 5செவ் 8இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:HND பட்டதாரி<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி<br>தொ.இ:G/6591 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



**யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு**
**அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோவில்**
**மஹாகும்பாபிஷேகம்**
**பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகம்**

காலம் : 23.01.2022 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 10.32-11.22 வரையுள்ள சுபவேளை

**கர்மாரம்பம் :**
19.01.2022 புதன்கிழமை காலை 5.30 மணி

**எண்ணெய்க்காப்பு**
காலம் : 22.01.2022 சனிக்கிழமை
காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 3மணிவரை

தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற திருவருள்பாலித்துள்ளது. கும்பாபிஷேக திருநாளிலும், அதற்கு முன்நடைபெறும் கர்மாரம்ப கிரியைகளிலும் அடியவர்கள் அனைவரும் உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றி ஆசாரசீலர்களாக கலந்து கொண்டு எம்பெருமானை வழிபட்டு இஷ்ட சித்திகளனைத்தையும் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'

பிரதிஷ்டா பிரதம குரு : சிவாச்சார்யதிலகம்
**சிவஸ்ரீ சதா.இராதாகிருஷ்ணக் குருக்கள்**
(கல்வியங்காடு)

ஆலய பிரதம குரு:
**சிவஸ்ரீ சதா.யோகீஸ்வரக்குருக்கள்**
(கல்வியங்காடு)

ஆலயக் குரு:
**சிவஸ்ரீ முத்து. ஸ்ரீநிவாசககுருக்கள்**
(கல்வியங்காடு)

சர்வபோதகம் : வேதாகம ஞானபாஸ்கரன்
**சிவஸ்ரீ தாணுமஹாதேவா சிவாச்சாரியார்**
(அதிபர், இணுவில் தர்மசாஸ்தா குருகுலம்)

நிர்மாண ஸ்தபதி :
தமிழ்நாடு கும்பகோணம்
**திரு.கி.மணிகண்டன் குழுவினர்**

மங்கள வாத்தியம் :
**திரு.S.செல்வகுமார் குழுவினர்**
(திருநெல்வேலி)

வர்ண வேலைகள் :
**திரு.சபேசன் குழுவினர்**
கல்வியங்காடு

ஒளி ஒலி அமைப்பு :
**குமார் சவுண்ட்**
நல்லூர்

**சந்திரசேகரப்பிள்ளையார் மேற்குப்புற வாசல்**
**அலங்கார வளைவு திறப்பு விழா,**
**ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் கலாசார மண்டப புகுவிழா**
**காலம் : 19.01.2022 புதன்கிழமை காலை 6.45 மணி**
**பஞ்சதளநாயகன் இறுவட்டு வெளியீட்டு விழா**
**காலம் : 20.01.2022 வியாழக்கிழமை மாலை 6 மணி**

'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

**நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தான அறங்காவல்குழு.**

(9712)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானில் அடுத்தடுத்து நிலநடுக்கங்கள்! இடிபாடுகளில் சிக்கி 26 பேர் உயிரிழப்பு

## 700 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதம்

(காபூல்)

**ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரண்டு நிலநடுக்கங்களால் நூற்றுக்கணக்கான வீடுகள், கட்டடங்கள் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளில் சிக்கி 26 பேர் பலியாகினர்.**



துர்க்மெனிஸ்தான் எல்லையை ஒட்டிய பட்கிஸ் மாகாணத்தில் நேற்று முன்தினம் மதியம் இரண்டு மணிக்கும் தொடர்ந்து இரண்டு மணி நேரங்கள் கழித்து 4 மணியளவிலும் நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

முதல் நிலநடுக்கம் 5.3 ரிக்டர் அளவிலும் இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு இரண்டாவது நிலநடுக்கம் 4.9 ரிக்டர் அளவிலும் பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் நாட்டை கடந்த ஓகஸ்ட் மாதம் தலிபான் கையகப்படுத்தியதன் பின்னர் அந்நாடு பெரும் பொருளாதார மற்றும் மனிதாபிமான நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது. ஆப்கானுக்கான சர்வதேச உதவிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், வெளிநாடுகளில் உள்ள சொத்துகளும் முடக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 26 பேர் பலியானதை ஆப்கான் அவசரகால விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் அவசரகால செயற்பாட்டு மையத்தின் தலைவர் முல்லா ஜனன் சாகே உறுதிப்படுத்தினார்.

அத்துடன், 700 க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (நி)

# இராணுவ ஆட்சிக்கெதிராக போராடிய எழுவர் சூடானில் சுட்டுக் கொலை



(கார்டும்)

சூடானில் இராணுவ ஆட்சிக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது இராணுவத்தினர் சரமாரியாக சுட்டதில் 7 பேர்பலியாகினர். மேலும் பலர் காயமடைந்தனர்.

சூடானில் இராணுவ ஆட்சிக்கு எதிராக தொடர்ச்சியாக மக்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


இந்நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தலைநகர் கார்டூமில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு பேரணியாக சென்றபோது அவர்களை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதற்கிடையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடந்த கொடிய வன்முறைக்கு மத்தியில் சூடானில் உள்ள அனைத்துக் கட்சிகளும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என ஐ.நா. பாதுகாப்பு சபை 9 உறுப்பு நாடுகள் இணைந்து கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் ஆயுதங்களை பிரயோகிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ஐ.நா. தூதுக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில் சூடானில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை ஐ.நா. மத்தியஸ்தர்கள் முன்னெடுத்துள்ளனர். (நி)

# 'நரகத்தின் வாசலை' மூட துர்க்மெனிஸ்தான் முடிவு



(துர்க்மெனிஸ்தான்)

மத்திய ஆசியாக் கண்டத்திலுள்ள துர்க்மெனிஸ்தானில் பிரபல சுற்றுலா பகுதியான நரகத்தின் வாசலை முற்றிலும் மூடப்போவதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

துர்க்மெனிஸ்தானின் டார்வேசா என்ற பகுதியில் இயற்கை எரிவாயு குறித்த ஆய்வின்போது நிலப்பரப்பில் வட்ட வடிவில் பெரிய பள்ளம் உருவானது. அதில் அதிக அளவில் மீதேன் இருப்பது கண்டறியப்பட்டது.

அந்த மீதேன் வாயு பரவாமல் இருப்பதற்காக 1971 ஆம் ஆண்டு அந்த பள்ளத்தில் தீ வைக்கப்பட்டது. அன்றில் இருந்து தற்போதுவரை அந்த பள்ளத்தில் தொடர்ந்து தீ எரிந்து வருகின்றது.

இதனால், அந்த பள்ளத்திற்கு "நரகத்தின் வாசல்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

அந்த பள்ளம் சுற்றுலா தலமாக தற்போது செயற்பட்டு வருகிறது. உலகின் பல்வேறு நாடுகளை சேர்ந்த சுற்றுலா பயணிகள் இந்த பள்ளத்தை காண வருகை தருகின்றனர்.

இந்நிலையில், நரகத்தின் வாசல் என்று அழைக்கப்பட்டு அந்தத் தீ எரியும் பள்ளத்தை மூட துர்க்மெனிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

50 ஆண்டுகளாக தொடர்ந்து எரிந்து வரும் தீயால் அப்பகுதியில் உள்ள இயற்கை எரிவாயு குறைந்து வருவதாகவும், இயற்கை எரிவாயு வீணாவதை தடுத்து அதை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரும் விதமாக நரகத்தின் வாசலை மூட உள்ளதாகவும் துர்க்மெனிஸ்தான் ஜனாதிபதி குர்மென்குலி பெர்முர்மெடெவ் தெரிவித்தார். (நி)

# கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2 மாதங்கள் வரை வைரஸ் உடலில் இருக்கும்

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(டில்லி)

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வைரஸ் 1 முதல் 2 மாதங்கள் வரை இருக்கும் என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

சீனாவின் வுகான் நகரில் தோன்றிய கொரோனா வைரஸ் பல்வேறு வகைகளில் உருமாற்றம் அடைந்து உலகம் முழுவதும் பரவி உள்ளது.

தற்போது ஒமிக்ரோன் தீவிரமடையும் இந்த நிலையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வைரஸ் 1 முதல் 2 மாதங்கள் வரை இருக்கும் என்று புதிய ஆராய்ச்சியில் தகவல் வெளியாகி உள்ளது.

இங்கிலாந்தை சேர்ந்த எக்சிடெர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் நடத்திய புதிய ஆய்வில் இது தெரிய வந்துள்ளது.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் தனிமைப்படுத்தப்படும் காலம் 5 நாட்களாக குறைக்கப்பட்டுள்ளன.

இதேபோல இந்தியாவிலும், கொரோனா தனிமை [illegible] (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவலங்களை மட்டும் சுமந்து நிற்கும் தமிழினத்தின் வாழ்வை கட்டமைக்க வேண்டியது நமது பொறுப்பே

## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் எடுத்துரைப்பு



**(பனிக்கன்குளம்)**

**உலகப் பந்தில் தன்னுடைய முகவரியை இழந்து கட்டுமானங்களையும் இழந்து வாழ்க்கையின் அவலங்களையும் சுமந்து நிற்கின்ற தமிழர்களின் வாழ்வை கட்டியெழுப்ப வேண்டிய கால கட்டத்துக்குள் நாங்கள் நிற்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.**

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்வாழ்வை கட்டியெழுப்பும் நோக்குடன் சேவையாற்றிவரும் மக்கள் நலன் காப்பகத்தின் பொங்கல் விழா நேற்று முன்தினம் மாங்குளத்தில் அமைந்துள்ள மக்கள் நலன் காப்பகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகப் பந்தில் தன்னுடைய முகவரியை இழந்து ஒரு தேசத்தின் கட்டுமானங்களையும் இழந்து வாழ்க்கையினுடைய அகல ஆழங்களையும் தேடிக்கொண்டிருக்கின்ற சுதேசிய இனமான நாங்கள் பொருளாதார ரீதியாக தமிழர்களின் வாழ்வை கட்டி எழுப்ப வேண்டிய காலகட்டத்துக்குள் நிற்கின்றோம்.

இன்று அரசியல் வாழ்வில் கூட கௌரவமான நியாயமான, நேர்மையான நிலைகளிலிருந்து பின்தள்ளப்பட்டிருக்கின்றோம். இந்தத் தீவில் தேசிய இனமாகிய தமிழ்த் தேசிய இனத்தினுடைய பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த வேண்டிய சமூகக் கடமையும் பொறுப்பும் எங்களிடம் இருக்கின்றது.

இந்தப் பொருளாதாரத்தை கட்டி வளர்ப்பதில் உலகத்தின் மிகப்பெரிய டயஸ்போராவாக புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் உள்ளனர். அவர்கள் தங்களால் இயன்ற பொருளாதார வளங்களை பயன்படுத்தி தமிழ் மக்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தி வருவதை நாங்கள் காண்கின்றோம்.

ஈழத் தமிழர்களின் வாழ்வு புலம்பெயர் தமிழர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. இன்னும் எமக்குச் சுதந்திரமான வாழ்வு இல்லை.

நாங்கள் இலக்கு நோக்கி பயணிக்கக்கூடிய சக்தி வாய்ந்தவர்களாக இல்லை.

கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை பயன்படுத்தி நாம் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (5-281)

## அத்தியாவசிய பொருட்கள் திருட்டு

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இயக்கச்சி பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் வீட்டில் இருந்த முதியவர்களின் கைகளை கட்டிவிட்டு வீட்டில் உள்ள அத்தியாவசிய பொருட்களான அங்கர், சீனி உட்பட சில பொருட்களையும் அவர்களின் வாழ்வதாரத்திற்காக வளர்த்த கோழிகள் மற்றும் பணம், நகை என்பன வற்றையும் திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் முதியவர்கள் இருவரும் கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர். இயக்கச்சி பகுதியில் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்று வருவதாகவும் அதிலும் அத்தியாவசிய பொருட்கள் திருடப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-316)

## தப்பியோடிய கைதி மீண்டும் பொலிஸாரால் கைது

(குருமன்காடு)

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில இருந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட கைதி ஒருவர் தப்பியோடியுள்ளார். துரிதமாக செயற்பட்ட பொலிஸார் குறித்த நபரை மீளவும் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரை சட்ட மருத்துவ அதிகாரியிடம் முன்னிலைப்படுத்துவதற்காக வவுனியா மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற போது அவர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார்.

இதனையடுத்து குறித்த நபரை தேடும் பணியைச் சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்தனர்.

பொலிஸாரின் துரிதமான செயற்பாட்டால் சி.சி.ரி.வி. கமராவின் உதவியுடன் தேடுதலை மேற்கொண்டு குறித்த நபரை மீளவும் கைது செய்துள்ளனர். (5-4-250)

## வவுனியா பரசங்குளத்தில் மோட்டார் குண்டுகள் மீட்பு

(நெளுக்குளம்)

வவுனியா பரசங்குளம் காட்டுப்பகுதியில் மோட்டார் குண்டுகள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன.

இராணுவப் புலனாய்வாளர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், புளியங்குளம் பொலிஸாருடன் இணைந்து பரசங்குளம் காட்டுப்பகுதியில் மேற்கொண்ட தேடுதலின் போதே குறித்த குண்டுகள் மீட்கப்பட்டன.

இதன்போது ஆர்.பி.ஜி.ரக குண்டு 01, 60 மில்லிமீற்றர் மோட்டார் குண்டு 03 உம் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட குண்டுகளை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணை புளியங்குளம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (5-4-299)



## நெல் சந்தைப்படுத்தலை மாவட்டத்திற்குள் மட்டுப்படுத்தக்கோரி கிளிநொச்சியில் கவனயீர்ப்புப் பேரணி



(முறிகண்டி)

பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் நெல் சந்தைப்படுத்தலை மாவட்டத்திற்குள் மட்டுப்படுத்தக்கோரி கிளிநொச்சியில் நேற்று கவனயீர்ப்பு பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பேரணி கிளிநொச்சி மாவட்ட பெண்கள் சிவில் சமூக வலையமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் வாசிக்கப்பட்டு அரசாங்க அதிபரிடம்மகஜர்கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அறுவடை இடம்பெற்று வரும் நிலையில் குறித்த நெல்லினை வெளி மாவட்டங்களிற்கு சந்தைப்படுத்தாது, மாவட்டத்திற்கு உள்ளேயே சேமிக்க நடவடிக்கை எடுக்குமாறு இதன்போது பேரணியில் ஈடுபட்டவர்களால் வலியுறுத்தப்பட்டது. (5-4-100-315-316)

## இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சோரன்பற்று பகுதியில் நபர் ஒருவர் சட்டவிரோத இடியன் துப்பாக்கி வைத்திருப்பதாக பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் இரவு குறித்த சந்தேக நபரின் வீட்டை சோதனையிட்ட போது சந்தேக நபரின் வீட்டிலிருந்து இடியன் துப்பாக்கி மீட்கப்பட்டதுடன் சந்தேக நபரையும் பளை பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பளை பொலிஸார் தெரிவித்ததுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (4-5-316)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 420 | 450 | 400 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 450 | 500 |
| தக்காளி | 180 | 170 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 70 | 50 |
| கோவா | 260 | 240 | 280 | 300 |
| கரட் | 340 | 440 | 460 | 500 |
| பூசணி | 120 | 90 | 130 | 200 |
| புடோல் | 280 | 250 | 200 | 250 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 240 | 150-250 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 220 |
| பாகற்காய் | 280 | 300 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 240 | 260 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 400 | 450 | 500 | 400 |
| லீக்ஸ் | 320 | 260 | 280 | 350 |
| பீற்றூட் | -- | 300 | -- | 400 |
| கறிமிளகாய் | 350 | 600 | 600 | 700 |
| முருங்கைக்காய் | 1000 | -- | 1200 | 1200 |
| போஞ்சி | 300 | 350 | 300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 320 | 360 | -- | 360 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 100 | 100 |
| தேசிக்காய் | 120 | 150 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 60-80 | 70-90 |
| இராசவள்ளி | 200 | 240 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 350 | 450 | 400 |
| முள்ளங்கி | 100 | 80 | 150 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 25 | 25 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | 100 | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசி பலன்கள்

## 14.01.2022 - 12.02.2022

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## முயற்சிகளில் தடைகள் அகல வழிபாடு அவசியம்!



**சாதனை நிகழ்த்தி சரித்திரம் படைக்க நினைக்கும் சிம்ம இராசி வாசகர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சூரியன் 6 ஆம் இடத்தில் சனியோடு இணைந்து சஞ்சரிக்கிறார். சப்தம ஸ்தானத்தில் உள்ள குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. எனவே பொருளாதார நிலை உயரும். உற்சாகத்தோடு செயற்படும் மாதம் இது.

**சூரியன் - சனி சேர்க்கை**

உங்கள் இராசிநாதன் சூரியனோடு, பகைக் கிரகமான சனி இணைந்து 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். இருப்பினும் குருவின் பார்வை இருப்பதால் இடையிடையே தடை ஏற்படுமே தவிர, பெரிய அளவில் பாதிப்புகள் வராது. சொன்ன சொல்லைக் காப்பாற்ற இயலாமல் போகலாம். துணிவும், தன்னம்பிக்கையும் குறையும். மனக்குழப்பம் காரணமாக எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. முயற்சிகளில் தடைகள் அகல வழிபாடு அவசியம். பணத் தேவை அதிகரிக்கும்.

**புத சுக்கிர யோகம்**

மாதத் தொடக்கத்தில் புதனோடு சுக்கிரன் சேர்ந்து பலம் பெற்று இருப்பதால், 'புத சுக்கிர யோகம்' ஏற்படுகிறது. எனவே இம்மாதம் பூர்வ புண்ணியத்தின் பலனாக உங்களுக்கு கிடைக்க வேண்டிய யோகங்கள் அனைத்தும் கிடைக்கும். சொத்துக்களால் ஆதாயம் உண்டு. தன - லாபாதிபதியாக புதன் விளங்குவதால், பொருளாதார உயர்வு ஏற்படும்.

உத்தியோகத்தில் உயர் பதவிகள் கிடைக்கலாம். வெளிநாட்டில் உள்ள பிரபல நிறுவனங்களில் பணி புரிய அழைப்புகள் வரலாம். எதையும் திட்டமிட்டுச் செய்து அதில் வெற்றி காணீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

**தனுசு செவ்வாய் சஞ்சாரம்**

இதுவரை உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரி த்து வந்த செவ்வாய், இப்பொழுது 5 ஆம் இடத்திற்கு செல்கிறார். இந்த நிகழ்வு தை மாதம் 4 ஆம் திகதி நடைபெற இருக்கிறது.

யோககாரகன் செவ்வாய் 5 இல் சஞ்சரிப்பதால் பூர்வ புண்ணிய ஸ்தானம் பலமடைகிறது. எனவே நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். கூட்டு முயற்சியில் ஆதாயம் கிடைக்கும். கொடுக்கல் - வாங்கல்கள் திருப்தி தரும்.




ஸ்தம்பித்து நின்ற தொழில் வெற்றிநடை போடும்.

**மகர புதன் சஞ்சாரம்**

தை 27 ஆம் திகதி, மகர இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது கடன்சுமை பாதிக்கு மேல் குறையும். 'வரவேண்டியது வரவில்லையே, கொடுக்க வேண்டியதைக் கொடுக்க முடியவில்லையே' என்று அங்கலாய்த்துக் கொண்டவர்களுக்கு, இப்பொழுது நல்ல பதில் கிடைக்கும். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும்.

கொடுக்கல்- வாங்கல் ஒழுங்காகும். தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தென்படும், இம்மாதம் பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும் மாதம் இது. பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். கணவன் - மனைவி உறவு திருப்தி தரும். அருகில் இருப்பவர்கள் உங்கள் முயற்சிக்கு உறுதுணையாக இருப்பர். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் அனுகூலம் ஏற்படும்.

பிள்ளைகளின் கல்யாண காரியங்கள் கை கூடும். குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு உயர்வும், எதிர்பார்த்த சலுகைகளும் எளிதில் கிடைக்கும்.

## பூர்வீக சொத்துக்களில் பிரச்சினைகள் வரலாம்!



**வாய்ப்புகள் வரும்பொழுது பயன்படுத்த சொல்லும் கன்னி இராசி வாசகர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன், தனாதிபதி சுக்கிரனோடு இணைந்து சஞ்சரிப்பதால் பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும். தாராளமாகச் செலவிட்டு மகிழ்வீர்கள். விரயாதிபதி சூரியன் 5 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் குடும்பச்சுமை கூடும்.

**சூரியன் - சனி சேர்க்கை**

உங்கள் இராசிக்கு பஞ்சமாதிபதி சனி, பஞ்சம ஸ்தானத்திலேயே பலம் பெற்றிருக்கிறார். அவரோடு விரயாதிபதி சூரியன் இணைந்திருக்கிறார். எனவே பூர்வீக சொத்துக்களில் பிரச்சினைகள் வரலாம். பிள்ளைகள் வழியிலும் பிரச்சினைகள் வரலாம். நல்ல காரியங்கள் நடப்பதில் சில தடைகள் ஏற்படும். விலை உயர்ந்த பொருட்களை விற்க நேரிடும். ஆரோக்கியத்திலும் அச்சுறுத்தல்கள் தோன்றும்.

இதுபோன்ற காலங்களில் திசாபுத்திக் கேற்ற தெய்வங்களையும், குலதெய்வ வழிபாடுகளையும் மேற்கொண்டால் கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினை படிப்படியாக மாறும்.

**புத சுக்கிர யோகம்**

புதன் உங்கள் இராசிநாதனாகவும், 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர். சுக்கிரன் உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்குபவர்.

இவை இரண்டும் ஒன்றாக இணைந்து சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதாரத்தில் இருந்த பற்றாக்குறை ஓரளவு அகலும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். வெளிநாட்டு முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

வீடு மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் உருவாகும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

**தனுசு செவ்வாய் சஞ்சாரம்**

தை 4 ஆம் திகதி, தனுசு இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அவர், உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர்.

அஷ்டமாதிபதி செவ்வாய் 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது வாகனத் தொல்லை ஏற்படும்.

கொடுக்கல்- வாங்கலால் உறவினர் பகை உருவாகலாம். தைரியமும், தன்னம்பிக்கையும் குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உடன்பிறப்புகளின் இல்லத்து சுப காரியங்களை முன்னின்று நடத்துவீர்கள்.




**மகர புதன் சஞ்சாரம்**

தை 27 ஆம் திகதி, மகர இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிநாதனாகவும், தொழில் ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் புதன், பஞ்சம ஸ்தானத்திற்கு செல்லும்பொழுது பல விதங்களிலும் நன்மைகள் கிடைக்கும்.

இக்காலம் உங்களுக்கு இனிய காலமாகும். பிள்ளைகளுக்கு, நல்ல வேலை அமையலாம்.

வாசல் தேடி வந்த வரன்கள் முடிவாகும். புதன் சுக்கிரனோடு இணைந்து 'புத ஆதித்ய யோக'த்தை ஏற்படுத்துவதால், கல்வி சம்பந்தமான முயற்சி வெற்றியாகும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். இம்மாதம் தட்சிணாமூர்த்தி வழிபாடு செல்வ நிலை உயர வழிகாட்டும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் குரு பார்வை தன ஸ்தானத்திலும், விரய ஸ்தானத்திலும் பதிவதால், தேவைக்கேற்ற பணம் கிடைக்கும். திட்டமிட்டு எதையும் செய்ய இயலாது.

கணவன் - மனைவிக்குள் அனுசரித்துச் செல்லுங்கள். உறவினர் பகை அதிகரிக்கும்.

சேமிப்புகள் கரையும். ஆரோக்கிய பாதிப்புகள் அகல ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துங்கள். பணி புரியும் இடத்தில் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காததால், வேறு வேலைக்கு முயற்சிப்பீர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்சிசன் தேவையுடைய கொவிட் நோயாளர்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

**அண்மைய நாட்களில் அடையாளம் காணப்பட்டு வரும் கொரோனா தொற்றாளர்களது எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டு வரும் நிலையில் பிராணவாயு தேவையுள்ள கொவிட் நோயாளர்களது எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட கொவிட் தொடர்பான இராஜாங்க அமைச்சின் பிரதான இணைப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி, பிராணவாயு தேவையுடைய கொவிட் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

கொவிட் நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 70 சத்திர சிகிச்சை கட்டில்களில், 52 கட்டில்களிலும் நோயாளர்கள் சிகிச்சை பெறுவருகின்றனர்.

கடந்த சில நாட்களாக நோயாளர்களின் எண்ணிக்கை சற்று அதிகரிப்பைக் காட்டுகிறது.

எனவே, பொதுமக்கள் உரிய வகையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என கொவிட்-19 தொடர்பான இராஜாங்க அமைச்சின் பிரதான இணைப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார். (நி)

# நீராடச் சென்ற மாணவன் மாயம்

(கொழும்பு)

பாணந்துறை கடற்கரையில் நீராடச் சென்ற பாடசாலை மாணவர் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

பாணந்துறை எலுவில பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய மாணவன் நேற்று முன்தினம் மாலை தனது சகோதரர் மற்றும் தந்தையுடன் பாணந்துறை கடற்கரைக்கு குளிப்பதற்குச் சென்றுள்ளார்.

குளித்துக் கொண்டிருந்த போது குறித்த மாணவன் ஓடையில் தவறி விழுந்து காணாமல் போயுள்ளார்.

பொலிஸ் உயிர்காப்பு பிரிவின் அதிகாரிகள் விசேட தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதுடன், இதுவரை மாணவன் தொடர்பில் எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (நி)

# ஜனாதிபதியை மண்டியிட்டு பணிந்ததால் விமர்சனங்களுக்கு ஆளான அதிகாரி



(கொழும்பு)

அதிவேக நெடுஞ்சாலையில் பயண அனுமதிக்கான சீட்டு கொடுக்கும் நபர், ஜனாதிபதி கோட்டாபயவை கைகூப்பி கும்பிடும் புகைப்படம் தொடர்பில் பல சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இவ்வாறு கும்பிடுபவர் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் என தெரியவந்துள்ளது.

அத்துடன் அவர் ஒரு பொறியிலாளர். இவ்வாறு படித்தவர்கள் கும்பிடுவது சமூக வலைத்தளங்களில் கடும் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது.

இது தொடர்பில் மூத்த அரசியல் விமர்சகரும் ஊடகவியலாளருமான குசல் பெரேரா சமூக வலைத்தளத்தில் கருத்துப் பகிர்ந்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

பயண அனுமதிக்கான சீட்டு கொடுக்கும் நபர், கைகூப்பி கும்பிட்ட செயற்பாடானது ஒட்டுமொத்தக் கல்விமுறையின் இறுதியான திவால் நிலையாகும் என்றும் விமர்சிக்கப்பட்டுள்ளது. (நி)

# சுற்றுலா விடுதிகளின் கட்டணம் திடீரென அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஹோட்டல்கள் மற்றும் அறைகளின் கட்டணங்கள் திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில மாதங்களாக இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையினால் இவ்வாறு ஹோட்டல்கள் மற்றும் அறைகளின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாச தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, சில ஹோட்டல்களில் ஒரு இரவுக்கான அறைக் கட்டணம் 50 ஆயிரம் ரூபாய் வரை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை நாட்டிற்கு 46 ஆயிரத்து 942 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ள நிலையில், தினமும் கிட்டத்தட்ட 3 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாகவும், இதற்காக 22 விமான நிறுவனங்கள் தற்போது இயங்கி வருவதாகவும் கூறப்படுகிறது. (நி)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தரம் பிரிப்போம்

நாம் எந்த ஒரு வேலையைச் செய்யு முன்னரும் அது தொடர்பான விடயங்களைச் சற்றேனும் சிந்தனை செய்ய வேண்டும்.

ஆனால் ஒரே நேரத்தில் நான்கு வேலைகள் வந்து சேர்ந்து விட்டால், குழப்பமடையாமல், எந்த வேலையை முதலில் மேற்கொள்வது என்பதிலேயே நம் கவனம் திசை திருப்பட வேண்டும்.

முக்கியமல்லாதவற்றை முதலில் மேற்கொண்டு, அரிய வாய்ப்புக்களை இழந்து, குழப்பத்திற்கும் மனக் கஷ்டத்திற்கும் நட்டத்திற்கும் ஆளாகும் மூளையற்ற மனிதர்களின் பட்டியலில் நாமும் இடம் பெறக் கூடாது.

இருக்கும் வேலைகளுள் எது சுலபமானதோ அதை முதலில் செய்வோம். கடினமானவற்றைப் பின்னர் பார்த்துக்கொள்வோம் என்னும் தவறான மனப்பான்மையானது வழுக்கும் வாழ்க்கைப் பாறையில் சறுக்குச் சக்கரங்களைக் கட்டிக் கொண்டு நடக்க முயல்வது போலாகும்.

ஒவ்வொன்றையும் எப்படியாவது முடித்தாக வேண்டுமே என்ற பதற்றத்தை முதலில் ஏற்படுத்திக் கொள்ளாதிருக்க வேண்டும். பதற்றப்படும் மனத்தால் சரியான முடிவை எடுக்க முடியாது.

அப்படியே எடுத்தாலும் அந்த முடிவு சரியானது தானா என்ற ஐயம் தலைதூக்கும். அதுவே நமக்கிருக்கும் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் கெடுத்துக் காரியத்தையும் குட்டிச் சுவராக்கிவிடும்.

எனவே, தெளிவான சிந்தனையுடன் பிரச்சினையை அணுக வேண்டும்.

முதலாவதாக, எத்தனை வேலைகள் உள்ளனவோ, அனைத்தையும் ஒன்றன் பின் ஒன்றாக எழுதிக் கொள்ள வேண்டும். இனி, கீழ்க்கண்ட கேள்விகளை ஒவ்வொரு வேலையின் மீது எழுப்புங்கள்.

இது மீண்டும் கிடைக்காத அரிய சந்தர்ப்பம் தானா?

தகுதியால் எல்லாவற்றையும் விட இது உயர்ந்தது தானா? செய்யாமல் தவிர்த்து, சம்பந்தப்பட்டவர்களைச் சமாதானப்படுத்த முடியாத வேலையா?

தள்ளிப் போடுவதால் மற்றவற்றைவிட அதி நட்டத்தை ஏற்படுத்துமா?

நேரமே இதன் பிரதானமான கருவா? தவிர்த்தால் குறிப்பிட்ட நண்பருடைய அல்லது பலருடைய கண்டனத்திற்கு உள்ளாவோமா?

இந்த ஆறு கேள்விகளும் உங்கள் முன்னுள்ள பிரச்சினை என்னும் பெரிய உருவத்தின் கழுத்தைச் சுற்றி நெரித்துக் கொல்லும் கணைகள் போன்றவை.

சற்றுப் பொறுமையுடன் சிந்தித்து, ஆம் இல்லை என்று அந்தந்த வேலையின் நேரே எழுதுங்கள்.

ஆம் என்பதை அதிகம் பெறும் வேலையை முதலாவதாகவும், இல்லை என்பதை அதிகம் பெறும் வேலையை முடிவாகவும் வரிசைப்படுத்துங்கள்.

இந்த வரிசையின் படி வேலையை மேற்கொள்ளுங்கள். உங்கள் முடிவு நூற்றுக்கு நூறு சரியானதாக இருக்கும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குரங்கு அரசனின் உயர்ந்த குணம்

வெகு காலத்திற்கு முன் அடர்ந்த காட்டுப் பகுதியில் ஒரு குரங்குக் கூட்டம் வசித்து வந்தது.

குரங்குகளின் அரசன் உயர்ந்தும் பலமுடனும் மதியூகத்துடனும் அவர்களை வழி நடத்தினான்.

குரங்குகள் நதிக்கரையில், ஓங்கி வளர்ந்த மாமரத்தைக் கண்டு பிடித்தன. அவற்றில் பெரியதும், சுவையானதுமான மாம்பழங்கள் காணப்பட்டன. அறிவாளியான குரங்கு அரசன் மற்ற குரங்குகளிடம்,

**குரங்கு அரசன்:** ஒரு பழத்தைக் கூட நீங்கள் நதியோடு போக செய்து விடாதீர்கள். அப்படி போக செய் தால் இந்த நதி அதை மனிதர்கள் வாழும் பகுதிக்கு கொண்டு சென்று விடும்.


ஒரு முறை இதனை அவர்கள் அறிந்து கொண்டால் நாம் இங்கு பாதுகாப்பாக இருக்க முடியாது. அவர்கள் பழத்தை தேடிவந்து நம்மையும் அழிப்பது நிச்சயம்.

குரங்குகள் எல்லாம் மிக கவனமுடன் மரக்கிளைகளின் நுனிகளில் இருந்த பழுத்த பழங்களை பறிப்பதில் கவனமாய் இருந்தன.

ஆனால் ஒருநாள் ஒரு பெரிய பழுத்த சுவையான மாம்பழம் யாருடைய கவனிப்பும் இல்லாத நிலையில் விழுந்து வெள்ளத்தில்போனது.

மாம்பழம் நீரலைகளில் அடித்து செல் லப்பட்டு மறுகரை ஓரமாய் சென்றது.

அங்கு அரண்மனை



சலவைத் தொழிலாளி துவைத்துக் கொண்டு இருந்தான். அவன் இந்த மாம்பழம் மிதந்ததைக் கண்டு எடுத்தான்.

அந்த மாம்பழம் சுவையாகவும், இனிமையாகவும் இருக்கும் என்று கருதினான். அதை தன் எஜமானன் ஆன அரசனுக்கு பரிசாக அளிக்க எண்ணினான்.

**சலவை தொழிலாளி:** அரசே இந்த தங்க மயமான மாம்பழத்தை.. காட்டுக்குள் நதிக்கரையில் கண்டு எடுத்தேன். நீங்கள் இந்த உயர்ந்த பழத்தை விரும்பு வீர்கள் என்று கருதினேன். ஆதலால் உடனே எடுத்து வந்தேன்.

அரசன் அந்தக் கனியை உண்டான். என் றுமே சுவைத்திராத சுவையைத் தந்தது அந்த மாம்பழம். மேலும் பல பழங்களை பெற விரும்பினான்.

சலவைக்காரன் நதியில் கண்டெடுத்த மாம்பழம் நிச்சயம் எதிர்ப்புறக் கரையிலிருந்து வந்து ஒதுங்கி இருக்க வேண்டும்.


எனவே அங்கு நிச்சயம் ஒரு மாமரம் இருக்கும். மாம்பழத்தின் இருப்பிடத்தை அடைய விரும்பி சில படை வீரர்களுடன் படகில் எதிர்ப்புறமாய் பயணம் செய்தான்.

படகிலிருந்தே அவர்களால் தொங்கும் மாம்பழங்களை காணமுடிந்தது. மாம்பழங்கள் பலவற்றை சுவைக்க முடியும் என்று அரசன் மகிழ்ந்தான். இதற்கிடையில் சில குரங்குகள் சில மனிதர்கள் வருவதைக் கண் டன.

ஓடிச்சென்று பழச்சோலையை நோக்கி சிலர் படகில் வருவதை அரசனுக்கு தெரிவித்தன.

(தொடரும்)

# மகாபாரதம்




பிள்ளைகளைப் பறி கொடுத்த தந்தைக்கும், தாய்க்கும் ஏற்பட்ட வேதனையைக் கண்டு தருமர் மனம் வாடினார். அவர்களுக்கு மனக்குறை ஏதும் ஏற்படாதவாறு நடந்து கொள்ள வேண்டும் எனத் தம்பியரிடம் கூறினார்.

துரியோதனன் காலமெல்லாம் தந்தைக்குத் தொல்லை கொடுத்து வந்தான். ஆனால் தருமரோ தன் தந்தை பாண்டு இருந்திருந்தால் எப்படி அவரைப் பார்த்துக்கொள்வாரோ அதைவிடப் பல மடங்கு அன்புடன் பெரியப்பாவிடம் நடந்து கொண்டார்.

காலப் போக்கில் தன் மக்கள் இல்லாத குறையைத் திருதராட்டிரன் மறக்கும் வண்ணம் தருமர் நடந்து கொண்டார்.

தருமரைப் போலவே குந்தியும், திரௌபதியும் திருதராட்டினனுக்கும் காந்தாரிக்கும் மனம் கோணாது பணிவிடை செய்தனர்.

பெரியப்பாவிற்கு மனம் கோணாமல் நடக்க வேண்டும் என தருமர் உரைத்தாலும், பீமன் மட்டும் சிறிது மாறுபாடாகவே நடந்து கொண்டான்.

தாங்கள் அனுபவித்த துன்பங்களுக்கு எல்லாம் உடந்தையாக இருந்ததற்காக திருதராட்டிரன் காதில் விழுமாறு எதையாவது சொல்லிக் கொண்டே இருந்தான். இருந்தாலும் திருதராட்டிரன் மனம் புண்பட்டாலும் காலப் போக்கில் பீமன் சொல்வது உண்மைதானே என நினைத்து பண்பட்டான்.

தருமர்ஆட்சிப்பொறுப்பை ஏற்றுப் பதினைந்து ஆண்டுகள் கழிந்தன. தருமரின் உபசரிப்பில் திருப்தியாய் இருந்தாலும், திருதராட்டினன் கானகம் சென்று கடுந் தவம் புரிந்து இவ்வுலக வாழ்க்கையை முடிக்க எண்ணினார்.

மனதில் முன்னர் இருந்த ஆசாபாசங்கள் இப்போது இல்லை. பிள்ளைப் பாசத்தால் செய்த கொடுமைகளை எண்ணி எண்ணி மனம் திருந்திய வனாகத் திருதராட்டினன் காட்சியளித்தான்.

ஷத்திரிய வம்சத்தில் பிறந்தவர்கள் போர்க்களத்தில் போர் புரிந்து வீர மரணம் அடைய வேண்டும் அல்லது முதிர்ந்த வயதில் கானக வாழ்க்கை மேற்கொண்டு தவம்இயற்றி உலக வாழ்க்கையை முடிக்க வேண்டும். போர்க்கள மரணத்திற்கு திருதராட்டிரனுக்கு வாய்ப்பில்லை. எனவே வனத்திற்குச் செல்ல விரும்பினான்.

ஒருநாள் சான் றோர்களை அழைத்து தனது எண்ணத்தை புலப்படுத்திப் பேசினான். "அன்புள்ளம் கொண்டவர்களே! கௌரவ வம்சமே வீழ்ச்சி அடைந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதன் அழிவிற்கு நானும் ஒரு காரணம்தான்.

புத்திர பாசத்தால் துரியோதனன் சொன்னவாறெல்லாம் நடந்து கொண்டேன். பீஷ்மர் போன்ற மேலானவர் கூற்றிற்கு எல்லாம் செவி சாய்க்காது புறக்கணித்தேன். என் தம்பியரின் புதல்வர்களுக்கு எல்லையற்ற தொல்லை கொடுத்தேன். தருமனையா பகைத்தேன். தருமத்தை அல்லவா பகைத்தேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பணி சிறிதா, பெரிதா என்பதல்ல. எந்தப் பணியாக இருந்தாலும் சலிப்பின்றி செய்யும் குணம் கொண்டவர் என்றால் போற்றுதலுக்குரிய முதல் மனிதர் நீங்கள்தான். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கம்பவாரிதி ஜெயராஜுக்கு ஓர் அன்பு மடல்

மரியாதைக்குரிய கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுக்கு அன்பு வணக்கம்.

மிக நீண்டநாட்களுக்குப் பின்னர் இக்கடிதத்தை எழுதுகின்றேன். முன்னைய கடிதங்கள் அரசியல் நிலைப்பாடுகள் சார்ந்தவையாக இருந்தன. ஆனால் இக்கடிதம் அதுவன்று.

மாறாக, கிளிநொச்சி ஜெயந்தி நகரில் கம்பன் கலைக்கல்லூரி கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டும் வைபவத்தில் நீங்கள் ஆற்றிய விளக்கவுரை சார்ந்து இக்கடிதம் அமைகிறது.

முன்னதாக 20 வருடங்களுக்கு முன்னர் திருநெல்வேலியில் உள்ள தனியார் வைத்தியசாலைக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் தாங்கள் கலந்துகொண்டு ஆற்றிய உரையும்

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு

என்று குறித்துரைத்த திருக்குறள் தொடர்பிலும் இவ்விடத்தில் எம் மனப் பதிவை எழுதியிருந்தோம்.

அதில் கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து எங்கள் இளைஞர்களை வழிப்படுத்தும் பெரும் பணியை ஆற்ற வேண்டும் எனக் கேட்டிருந்தோம்.

இப்போது நீங்கள் கிளிநொச்சி மண்ணில் கம்பன் கலைக்கூடத்தை ஆரம்பித்து, அதனூடு எங்கள் இளம் சமூகத்தை ஆளுமையும் ஆற்றலுமிக்கவர்களாக ஆக்குகின்ற பணியைச் செய்யவிருப்பதாக அறிவித்தபோது இதயம் நெகிழ்ந்தது.

உங்களின் விளக்க உரையில் எங்கள் தமிழ் இளைஞர்களின் சமகால நிலைபற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தீர்கள்.

உண்மை, இன்றைய எங்கள் இளைஞர்களின் சிந்தனையும் அவர்களின் வழிப்பாதையும் திசை மாறியுள்ளன.

அரசியல் பற்றியோ அரசியல் விமர்சனங்கள் பற்றியோ எங்கள் தமிழினத்தின் நிலைமை பற்றியோ அவர்கள் ஆராயவும் தம்மத்தியில் கலந்துரையாடவும் நினைப்பதில்லை.

இங்குதான் எங்கள் இனத்தின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறதோ என்ற ஏக்கம் எழுகிறது.

ஆம், நீங்கள் கூறியதுபோல எங்களுக்கான அரசியல் உரிமை பற்றிய விடயங்கள் ஒருபுறம் நடக்க, மறுபுறத்தில் எங்கள் இளைஞர்களை எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுக்கும் ஆளுமை கொண்டவர்களாக – ஆற்றல்மிக்கவர்களாக – ஏனைய இனத்து இளைஞர்களுக்கு எந்தவகையிலும் சளைத்தவர்கள் அல்ல என்ற மனத்திடத்தை ஊட்டுவதும் உருவாக்குவதும் அவசியம் என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர்.

ஆம், எங்கள் தமிழினம் பல்துறைசார்ந்து சமாந்தரமாகப் பயணிக்க வேண்டியுள்ளது.

அதில் எம் இளைஞர்களின் ஆளுமையை – ஆற்றலை மேம்படுத்தத் தாங்கள் எடுத்திருக்கக்கூடிய இப்பெருமுயற்சி போற்றுதலுக்குரியது.

மரியாதைக்குரிய கம்பவாரி இ.ஜெயராஜ் அவர்களே! தங்களின் திருக்குறள் விளக்கவுரைகள் தமிழகத்து இளைஞர்களையும் புத்திஜீவிகளையும் சுண்டி இழுக்கிறது.

இலக்கியத்தினூடு உங்களால் அவர்கள் ஆளுமைப் படுத்தப்படுகின்றனர். ஆக உங்களின் திருக்குறள் விரிவுரை இங்கும் ஒலிக்குமாயின், அது எங்கள் இளைஞர்களிடம் ஆளுமையை – ஆற்றலை ஊட்டி வளர்க்கும் என்பது சர்வநிச்சயம்.

ஆகையால் கம்பன் கலைக்கூடத்துக்கான கட்டுமானம் அமையும் சமநேரத்தில் உங்கள் விரிவுரைகள் எம் மண்ணின் மூலைமுடுக்கெல்லாம் ஒலிக்கட்டும்.

அது நீங்கள் முன்னெடுத்துள்ள இலக்கை கனகச்சிதமாக ஆக்கித் தரும்.

## இலங்கை மின்சார சபைக்கு மின்னுற்பத்திக்கான எண்ணெய் வழங்க கனியவளக் கூட்டுத்தாபனம் மறுப்பு

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ந்து மின்தடை ஏற்பட்டு வரும் நிலையில் மின்னுற்பத்தியை மேற்கொள்ள போதுமான எண்ணெய் வளம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை மின்சார சபைக்கு, கனியவளக் கூட்டுத்தாபனமும் எண்ணெய் வழங்க மறுத்துள்ளது.

இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்துடன் மின்சக்தி வளத்துறை அமைச்சு பேச்சுவார்த்தை நடத்தியது.

எனினும் மின்சார சபை முன்வைத்த கோரிக்கையை இலங்கை மற்றும் இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் மறுத்துள்ளது.

இந்நிலையில் எண்ணெய் பெற்றுக் கொள்வது தொடர்பாக மத்திய வங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதாக அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். (ம)

## எரிபொருள் இன்மையால் களனி திஸ்ஸ, சப்புகஸ்கந்த மின் உற்பத்தி நிலையங்களின் பணிகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

எரிபொருள் இன்மையால் களனி திஸ்ஸ மற்றும் சப்புகஸ்கந்த மின்னுற்பத்தி நிலையங்களின் மின்சார உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள டீசலை பயன்படுத்தி மின்வெட்டை அமுல்படுத்தாதிருக்க முயற்சிப்பதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப்பேச்சாளர் அன்ரூ நவமணி குறிப்பிட்டார்.

இந்நிலையில், பெட்ரோலிய கூட்டுத்தாபனம் ஊடாக 900 மெட்ரிக் தொன் எரிபொருளை இலங்கை மின்சார சபைக்கு வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம)

## பதவி நீக்கப்பட்ட சுசில் பிரேமஜயந்தவின் ஆசனமும் சபையில் பின்தங்கியது

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட சுசில் பிரேமஜய்ந்தவின் பாராளுமன்ற ஆசனமும் மாற்றப்பட்டுள்ளது.

கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக் கழகங்கள் மற்றும் தொலைதூரக் கல்வி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சராக இருந்த போது, அவர் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியில் 31ஆவது ஆசனத்தைப் பெற்றிருந்தார்..

தற்போது பாராளுமன்ற உறுப்பினராக மாத்திரம் இருப்பதால் அவருக்கு ஆளும் கட்சியின் 71ஆவது ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளதாக படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதனால் அவர் 40 இடங்கள் பின்தங்கி ஆளும் கட்சியின் 71 ஆவது ஆசனத்தில் நேற்று அமர்ந்திருந்தார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சித்ததாகக் கூறி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து அண்மையில் சுசில் பிரேமஜயந்த நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பிரதமர் மகிந்த தலைமையில் ஆளுங்கட்சி உறுப்பினர்களின் முதலாவது குழு கூட்டம்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையில் நேற்று முற்பகல் ஆரம்பமாகி ஜனாதிபதியால் எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கான அரசாங்கத்தின் கொள்கை பிரகடனம் முன்வைக்கப்பட்டதை தொடர்ந்து 2022 ஆம் ஆண்டின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கூட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் பாராளுமன்ற குழு அறை 01 இல் இடம்பெற்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கொள்கை பிரகடனம் தொடர்பிலான ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தினை ஜனவரி 19 மற்றும் 20 ஆகிய இரு தினங்கள் நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** 18 ஆவது வி.ஜ.ஆர். இராணுவ முகாம்-தேவிபுரம், 68ம் பிரிவு இராணுவமுகாம்- இரணைப்பாலை, 68 ஆவது பிரிவு டயலொக் கோபுரம்- இரணைப்பாலை, தேவிபுரம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** முகத்தான்குளம் 1 ஆவது பண்ணை குருக்களூர் மன்னார் வீதி, நீலியமோட்டை, பறயணாளங்குளம் குருக்களூர், ஆசிக்குளம், புபுதுகம ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வீதி புனரமைக்க நடவடிக்கை

(அக்கராயன்)

பூநகரியில் நீண்ட காலமாக அபிவிருத்தி செய்யப்படாமல் காணப்படும் கரியாலை நாகபடுவான் இல. 3 பாடசாலையில் இருந்து கரியாலை நாகபடுவான் இலக்கம் 2 பாடசாலை வரையான 4 கிலோ மீற்றர் பிரதான வீதி தார் வீதியாக அமைக்கப்பட உள்ளது.

பூநகரி பிரதேச சபையின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை அதற்கான மதிப்பீட்டு வேலைகளை மேற்கொண்டுள்ளது.

(5-4-350)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

நரேந்திரர் எழுந்து வெளியே சென்றார். அறையில் கேதார், பிராண கிருஷ்ணர், ம- முதலிய பலர் இருந்தனர்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: ‘இதோ பாருங்கள். பாட்டு, வாத்தியம், படிப்பு எல்லாவற்றிலும் நரேந்திரன் கெட்டிக்காரன். அன்றொரு நாள் கேதாருடன் வாதம் செய்தான், கேதாரின் வாதங்களை எல்லாம் நொறுக்கித் தூள்தூளாக்கிவிட்டான்.’ (குருதேவரும் மற்றவர்களும் சிரித்தனர்.)

குருதேவர் (ம-விடம்): ‘ஆங்கிலத்தில் தர்க்கம்பற்றி ஏதாவது புத்தகம் இருக்கிறதா?’

ம-: ‘ஆம் சுவாமி, ஆங்கிலத்தில் தர்க்க சாஸ்திரம் உண்டு.’

ஸ்ரீராமகிருஷ்ணர்: ‘நல்லது. அதைப்பற்றி சிறிது கூறு. கேட்கலாம்.’

ம- தர்மசங்கடத்தில் மாட்டிக் கொண்டார். அவர் கூறினார்: ‘பொதுவான கருத்திலிருந்து குறிப்பிட்ட கருத்தைக் கூறும் தர்க்கம் ஒருவகை. உதாரணமாக, மனிதர்கள் எல்லோரும் சாகக் கூடியவர்கள், பண்டிதர்களும் மனிதர்களே, ஆகவே பண்டிதர்களும் சாகக் கூடியவர்கள் இது ஒருவகை. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

56

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



பலாப்பழத்தின் காம்புக்கு அருகில் உள்ள சிறு முட்களை எண்ணிக்கையை ஆறால் பெருக்கி வரும் விடையை ஐந்தால் வகுக்க கிடைக்கும் ஈவானது பழத்தினுள் உள்ள சுளைகளின் எண்ணிக்கையாகும். உதாரணமாக பலாப்பழத்தில் உள்ள முட்களின் எண்ணிக்கை = 100, இதை 100 X 6 = 600, 600 ஐ 5 ஆல் வகுக்க 120 ஈவாக வரும். இதுவேசுளைகளின் எண்ணிக்கையாகும்.

இதேபோன்று ஒரு பூசணிக்காயின் கீற்றுகளை எண்ணிக் கொண்டு அதை மூன்று ஆறு ஐந்து இவற்றால் பெருக்கி வரும் விடையை பாதியாக்கி மீண்டும் மூன்றால் பெருக்கினால் வருவது விதைகளின் எண்ணிக்கையாகும்.

**பலகாரம் தின்ற நாள் கணக்கு**

ஒரு பட்டணத்தில் இருந்த ஒரு செட்டியார் வீட்டிற்கு அவருடைய மருமகன் விருந்தாளியாக வந்து சேர்ந்தார். அவருக்கு நாள்தோறும் பலகாரம் செய்ய முடியாமல் ஒரே நாளில் தானே முப்பது சாண் நீளத்தில், 30-சாண் உயரத்தில், முப்பது சாண் அகலத்தில் ஒரு பலகாரம் செய்து அதை நாளும் ஒரு சாண் நீளம், ஒரு சாண் அகலம், ஒரு சாண் உயரம் என அரிந்து விருந்திட்டார். அதை எத்தனை நாளைக்கு விருந்திட்டார்? (க.அ 6 1 ப.எ.67) புதிர்விளக்கம்

**விடை**

பலகாரத்தின் மொத்த கன அளவில் 30X30X30=2700 கன அலகுகள்; தினம் விருந்திட்ட பலகாரத்தின் கன அளவு =1X1X1=1 கன அலகு; ஒரு வருடத்திற்கு விருந்திட்ட பலகாரத்தின் கனஅளவு = 360 X1=360 (காரி நாயனார் ஒரு வருடம்=360 நாட்கள் எனக் கணக்கிட்டுள்ளார்). அப்படியானால் மொத்தப்பலகாரத்தை விருந்திட்ட ஆண்டுகள்=2700/360=75 ஆண்டுகள்.

**வண்டுகள் கணக்கு**

நீர்வளம் பொருந்திய ஒரு தடாகத்தில் தாமரைப் பூக்கள் மலர்ந்து இருந்தன. அம்மலர்களில் வண்டுகள் சில வந்திறங்கி பூவுக்கு ஒன்றாக உட்கார்ந்தன. ஒரு வண்டுக்கு பூ கிடைக்கவில்லை.

ஆகவே வந்த வண்டுகள் எல்லாம் எழுந்து பூ ஒன்றுக்கு இரண்டு வண்டுகளாக இறங்கின. இப்பொழுது ஒரு பூ எஞ்சியது ஆயின் வந்த வண்டுகள் எத்தனை? மலர்ந்த மலர்கள் எத்தனை? (க.அ65 ப.எ.69) - விடை - வந்தவண்டுகள்4, மலர்ந்த மலர்கள் 3.

பண்டைய காலத் தமிழர்கள் கணிதத்தில் புலமை பெற்று விளங்கினார்கள் என்பதற்கு காரி நாயனாரின் இந்நூல் சிறந்த சான்றாகும். அன்றாட வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகளைக் கொண்டு பல புதிர்களை உருவாக்கி கணித அறிவினை மேலும் வளர்த்துள்ளார்.

இன்றைய நவீன தொழில்நுட்ப உதவியுடன் பல அறிவியல் நுணுக்கங்களை இன்று நாம் அறிந்து கொள்கிறோம். எந்த ஒரு தொழில் நுட்ப உதவியும் இன்றி உலகத்தையும் சமுத்திரத்தையும் இந்நூலின் ஆசிரியர் கணக்கிட்டுள்ளது வியப்புக்குரிய ஒன்றாகும். (நன்றி-முத்துக் கமலம் இணைய இதழ்). ஆனால் கணக்கதிகாரம் வட மொழியில் இருந்து தமிழிற்கு மாற்றியதாகக் கூறப்படுகிறது.

தமிழில் கணக்கியலை விளக்கும் வகையில், ஏரம்பம், சினராலயம், கணித இரத்தினம், சிறு கணக்கு முதலிய பல நூல்கள் முன்பு இருந்துள்ளன. இன்றும் கணக்கதிகாரம், ஆத்தான கோலாகலம், கணித தீபிகை ஆகியவை இருக்கின்றன. தமிழ்க் கணக்கு நூல்களில் தமிழ் எண்கள்தான் பயன் படுத்தப்பட்டுள்ளன.

**தமிழில் கணக்கியலை விளக்கும் வகையில், ஏரம்பம், சினராலயம், கணித இரத்தினம், சிறு கணக்கு முதலிய பல நூல்கள் முன்பு இருந்துள்ளன. இன்றும் கணக்கதிகாரம், ஆத்தான கோலாகலம், கணித தீபிகை ஆகியவை இருக்கின்றன. தமிழ்க்கணக்கு நூல்களில் தமிழ் எண்கள்தான் பயன்படுத்தப் பட்டுள்ளன.**

தமிழ் நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்த எல்லைக் கற்களிலும் தமிழ் எண்கள் குறிக்கப்பட்டு வந்தன (படம் 1). அவர்கள் ஆட்சியில் பணத்தாள்களில் தமிழ் எண்கள் இருந்தன (படத்தைப் பார்க்கவும்). இன்று அவை இல்லை. ஆனால் இன்றும் மொரிசீயசு நாட்டுப் பணத்தாளில் தமிழ் எண் உள்ளது.

**தமிழ் நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்த எல்லைக் கற்களிலும் தமிழ் எண்கள் குறிக்கப்பட்டு வந்தன. அவர்கள் ஆட்சியில் பணத்தாள்களில் தமிழ் எண்கள் இருந்தன. இன்று அவை இல்லை. ஆனால் இன்றும் மொரிசீயசு நாட்டுப் பணத்தாளில் தமிழ் எண் உள்ளது.**

தமிழ்மொழியில் இலக்கங்களை எழுதுவதற்கென்று தனித்துவமான குறியீடுகள் அல்லது எழுத்துகள் இருந்தாலும், இன்றைய நாட்களில் பஞ்சாங்கங்களைத் தவிர்த்து அவை பயன்படும் இடங்களைக் காண்பது அரிது. ஆயினும் மொரீசியஸ் நாட்டின் பணத்தாள்களில் இவ்விலக்கங்களை இப்போதும் காணக்கூடியதாயிருப்பது குறித்துத் தமிழர்கள் அனைவரும் பெருமை கொள்ளலாம்.




படம்-1 ஆங்கிலேயர் ஆட்சியில் தமிழ் நாட்டில் இருந்த எல்லைக்கல் (நன்றி - இணையம்)

மொரிசீயசு நாட்டுப் பணத்தாளில் தமிழ் எண்




தமிழ் எண்கள்

**தமிழ்மொழியில் இலக்கங்களை எழுதுவதற்கென்று தனித்துவமான குறியீடுகள் அல்லது எழுத்துகள் இருந்தாலும், இன்றைய நாட்களில் பஞ்சாங்கங்களைத் தவிர்த்து அவை பயன்படும் இடங்களைக் காண்பது அரிது. ஆயினும் மொரீசியஸ் நாட்டின் பணத்தாள்களில் இவ்விலக்கங்களை இப்போதும் காணக்கூடியதாயிருப்பது குறித்துத் தமிழர்கள் அனைவரும் பெருமை கொள்ளலாம்.**

**எண்களில் விளையாடும் தமிழ்**

இத் தமிழ் இலக்கங்களை வைத்து, சிறுவர்கள் முதல் பெரும் புலவர்கள் வரை தமிழில் விளையாடி வந்திருக்கிறார்கள். அவற்றைப்பற்றிச் சற்றே பார்க்கலாம்.

சிறுவயதில் விடுகதைகள் அல்லது புதிர்கள் போட்டு அவற்றை அவிழ்க்கச்சொல்லி விளையாடுவது சிறுவர்களுக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டுகளில் ஒன்றாகும். அந்த வகையில் தமிழ் எண்களை வைத்துச் சிறுவர்கள் பகிடியாக விளையாடும் விடுகதைகளில் ஒன்றைப் பார்ப்போம்.

உன் தலையில ஏழ (ஏழு) வைச்சு இடையில அஞ்ச (ஐந்து) வைச்சு கடைசியா மையை வைச்சா உன் பெயர் வரும் அது என்ன?

**தமிழ் எண் இலக்கங்களை வைத்து, சிறுவர்கள் முதல் பெரும் புலவர்கள் வரை தமிழில் விளையாடி வந்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு உன் தலையில ஏழ (ஏழு) வைச்சு இடையில அஞ்ச (ஐந்து) வைச்சு கடைசியா மையை வைச்சா உன்பெயர் வரும் அது என்ன? விடை எருமை.**

இந்தியாவில் முதன்முதலாய் அச்சடுக்கப்பட்ட தாளில் தமிழ் எண் இருந்தது




(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 பேர்...

பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,231 ஆக உயர்ந்துள்ளது. (ம)

## 13 ஆவது திரு...

றைப்படுத்துமாறு வலியுறுத்துவதோடு தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுமாறும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள இந்திய தூதரின் இல்லத்தில் இந்தியத் தூதுவரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் இந்த ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராசா (இலங்கைத் தமிழரசுக் கட்சி), சி.வி.விக்னேஸ்வரன் (தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்), சுரேஷ் பிரேமச்சந்திரன் (ஈ.பி.ஆர்.எல்.எப்.) மற்றும் எம்.ஏ. சுமந்திரன் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர்), குருசுவாமி சுரேந்திரன் (ரெலோவின் ஊடகப் பேச்சாளர்) ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



















இலங்கையின் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது பேசப்பட்டது. (ம)

## ஜனாதிபதியின்...

கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்து எவ்வித அறிவிப்பையும் ஜனாதிபதி வழங்கவில்லை.

இந்நிலையில் குறித்த தேநீர் விருந்துபசார நிகழ்வினை கூட்டமைப்பு புறக்கணித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (ம)

## ஜனாதிபதி உரை...

அதற்காக எழுந்தார். எனினும், யோசித்தவர், பாராளுமன்ற சம்பிரதாயங்களை மீறி நடக்கக் கூடாது என்பதற்காக அப்படி கருத்துத் தெரிவிப்பதைத் தவிர்த்துக் கொண்டார்.

ஆனால், பாராளுமன்றை விட்டு வெளியே வரும்போது "லொபி"யில் தமக்கு முன்னால் எதிர்ப்பட்ட நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவிடம் தமது கோபத்தை சம்பந்தன் காட்டினார்.

"ஜனாதிபதியின் இந்தப் பேச்சு வெறும் குப்பை. உருப்படியாக இதில் எதுவும் இல்லை. இதைப் போய் அவரிடம் சொல்லுங்கள். நான் தேநீர் உபசாரத்துக்கு வரவில்லை. வந்தால் இதை நானே அவருக்கு நேரடியாகக் கூற வேண்டியிருக்கும். அப்படி வேண்டாம் என்பதற்காகத்தான் தேநீர் உபசாரத்தையே தவிர்த்துக் கொண்டிருக்கின்றேன்.

இந்தப் பேச்சு வெறும் குப்பை. தவிர வேறு எதுவுமில்லை என்பதை நான் கூறினேன் என்பதை அவரிடம் போய்ச் சொல்லுங்கள். எங்களுடைய நாட்டின் தேசிய பிரச்சினை குறித்து ஏதும் இந்தப் பேச்சில் சொல்லப்படவில்லை.

இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் உங்களுக்கு எதுவும் சரிப்பட்டு வராது. உருப்படவே மாட்டீர்கள் என்பதை அவரிடம் போய்ச் சொல்லுங்கள் என்று சம்பந்தன் சீற்றத்துடன் கூறினார்.

இந்தத் திடீர் தாக்குதலை எதிர்பார்க்காத பஸில் ராஜபக்ச விடயத்தைச் சமாளித்து, "தாங்க்யூ, தாங்க்யூ...!" என்று கூறி அங்கிருந்து அகன்றார்" என்று தகவல் வெளியிட்டார் சுமந்திரன் எம்.பி. (ம)

## ஜனாதிபதியின் கொ...

டாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி நேற்று அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையை ஆற்றினார்.

இதன்போது அவர் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து எந்த காத்திரமான விடயத்தையும் முன்வைக்கவில்லை. மாறாக அரசியல் கொள்கைகளை ஒதுக்கி வைத்துவிட்டு அரசாங்கத்தின் வாழ்வாதார செயற்பாடுகளில் ஒத்துழைக்க வேண்டும் என்று வடக்கு கிழக்கு பிரதிநிதிகளுக்கு அவர் அழைப்பு விடுத்ததில் எவ்வித யதார்த்தமும் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைக்காகவே மக்கள் அதற்கு வாக்களித்து பாராளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளனர். எனில், அந்த கொள்கைகளை விட்டு விட்டு எவ்வாறு செயற்பட முடியும்.

இலங்கையில் எந்த ஒரு பிரச்சினையும் இல்லையென்ற அடிப்படையிலேயே ஜனாதிபதியின் உரை அமைந்திருந்ததாகவும் சுமந்திரன் குறிப்பிட்டார். (ம)

## கிணற்றில் தவறி...

மாலை 6.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஜெகன் ஜனனிகா (வயது- 16) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார். வீட்டில் வளர்க்கப்படும் ஆட்டிற்கு குழை வெட்டுவதற்காக மேற்படி சிறுமி சென்றதாகவும் அவர் கிணற்றுக் கட்டில் ஏறி நின்று குழை வெட்டியபோது அவர் கிணற்றில் தவறி விழுந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அவர் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்துள்ளார். (ம -60)

## அரசின்...

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரை ஆரம்பித்து, தமது கொள்கை விளக்க உரையை நிகழ்த்தியபோதே ஜனாதிபதி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

தமது ஆட்சிக் காலத்தில் மனித உரிமை மீறல்கள் எவையும் இடம்பெறுவதற்கு இடமளிக்கவில்லை என்றும், அவ்வாறான விடயங்களுக்கு இனியும் இடமளிக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது கொள்கை விளக்க உரையில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தாம் பாதுகாப்பு செயலாளராக இருந்த காலப்பகுதியில் வடக்கு கிழக்கில் பாதுகாப்புத் தரப்பினரால் கைப்பற்றப்பட்ட காணிகளில் 90 சதவீதமானவை விடுவிக்கப்பட்டதாகவும், இன்னும் விடுவிக்கப்படாத காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் என்றும் கூறினார்.

முன்னாள் விடுதலைப் புலிகளின் போராளிகளை சட்ரீதியான நடவடிக்கைகளுக்கு அமைய விடுவிப்பதற்குக் கடந்த காலங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

எதிர் காலத்திலும் அவ்வாறான பலரை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் பயங்கரவாத தடை சட்டத்தில் காலத்துக்கு ஏற்ற மாற்றங்களைச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மக்கள் பிரதிநிதிகள் தங்களது அரசியல் நிலைப்பாடுகளை தற்காலிகமாகவேனும் ஒதுக்கி வைத்து, அந்த பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

## அரசு தோல்வி...

அரசாங்கம் தவறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் டொலர் பற்றாக்குறையே பல நெருக்கடிகளுக்கு காரணம் என சுட்டிக்காட்டிய அமைச்சர், என்ன சொன்னாலும் இந்த நெருக்கடியை போக்க அரசாங்கம் தவறியுள்ளதாக தெரிவித்தார். (ம)

## அரசியல்...

பொய்த்தன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அடுத்த மூன்று வருடங்களுக்கான தனது அரசாங்கத்தின் கொள்கை நோக்கை விளக்கி நேற்று பாராளுமன்றத்தில் ஆற்றிய நீண்ட உரையில், தேசிய இனப் பிரச்சினையை, பொருளாதார பிரச்சினையாக மட்டுமே பார்க்கும் தனது கொள்கை மாறவில்லை என்பதை தெளிவாக கோடிட்டு காட்டினார்.


"ஜனாதிபதி இனப்பிரச்சினையைப்பற்றி ஒரு வார்த்தையும் கூறாமல், கடலுக்கு அடியில் அமைக்க திட்டமிடும் டிஜிடல் தொழில்நுட்ப கேபிள்களை பற்றி அதிகம் பேசினார். உங்கள் இனப்பிரச்சினையையும் அங்கே கடலுக்கு அடியில் புதைக்க போகிறாரோ" என அவ்வேளை என்னுடன் உரையாடிய முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேலியாக தெரிவித்தார் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார் (ம)














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3491)

0768226240 DHL

யாழ்ப்பாணத்தில் படிப்பு & கனடாவில் வேலை

மேலதிக விபரங்களுக்கு (C-3492)

21,22,23 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் சர்வதேச கண்காட்சியில் STALL-C19

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்
777-068-777

30 நாட்களில் ஆங்கிலம்

Spoken English with Grammer

30 DVD - 2,000/=

பயிற்சி புத்தகம் முற்றிலும் இலவசம். (9727)

077 088 5678

தேவை

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல ஹாட்வெயர் கடைக்கு அனுபவமுள்ள கணக்காளர் தேவை. (9721)

070 640 6905
077 541 3064

வேலை வாய்ப்பு

யாழ். நகரின் மத்தியில் இயங்கிவரும் புத்தக நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை. (பெண்கள்) நேரில் வரவும். (9718)

078 396 9548

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (9714)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம். நெல்லியடி. பருத்தித்துறை. சாவகச்சேரி. கொடிகாமம். கிளிநொச்சி. மானிப்பாய். சுன்னாகம். அச்சுவேலி. சங்கானை வல்வெட்டித்துறை. உடுப்பிட்டி. முல்லைத்தீவு. வவுனியா. மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9715)

076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக்கிணற்றடி அருகாமையில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- 14 அடி பாதையுடன்
- கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்:

காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை,

விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

077 814 7389
077 614 7333

(9719)


# மரண அறிவித்தல்



## நடராசா சாந்தாதேவி

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் அரியாலை யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட நடராசா சாந்தாதேவி அவர்கள் கடந்த 16.01.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சீதாலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னையா நடராசா அவர்களின் பாசமிகு மனைவியும் சிவமங்களம் (அரியாலை), பதிமங்களம் (அரியாலை), சிவகுமார் (குரு ஹாட்வெயர் - கிளிநொச்சி), ரதிமங்களம் (பிரான்ஸ்), சாந்தினி (லண்டன்), சதீஸ்குமார் (கிளிநொச்சி), அமலகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் முருகானந்தன் (பகலவன் பல்பொருள் வாணிபம், அரியாலை), வினோஜா, சுதர்சன் (பிரான்ஸ்), குமாரதாஸ் (லண்டன்), செல்வி, சோபனா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் அபிநயா, அபிசனன், அர்ச்சனா, அஸ்வின், அபினன், அஸ்விகா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் வேணுஜன், அர்ச்சனன், ஹம்சிஜன், அக்சனா, றைஸ்வர்யா, ஆதிரா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 20.01.2022 (வியாழக்கிழமை) அன்று காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (இல.138, நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்) நடைபெற்று தகனக் கிரியைகள் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 138, நெடுங்குளம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

077 869 1045
+44 744 701 1539
077 696 6169

தகவல்:-
குடும்பத்தினர்
(C-3567)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.